உ

கணபதி துணை.

அந்தகக்கவி வீரராகவமுதலியார்

இயற்றிய

திருவாரூருலா.

292

இஃது

உத்தமதானபுரம்

வே. சாமிநாதையரால்

பலபிரதிரூபங்களைக்கொண்டு பரிசோதித்துத்

தாம் நூதனமாக எழுதிய அரும்பதவுரையுடன்

பதிப்பிக்கப்பட்டது.

T000292
Sarasvati Mahal Library. Thanjavur
...ரத் தமிழ்ச் சங்...
...DURA TAMIL SA...

"செந்தமிழ்"ப் பிரசுரம்—கசு.

[இரண்டாம் பதிப்பு]

தமிழ்ச்சங்க முத்திராசாலை

மதுரை.

1925.

Q23:38 44147 292
F5

உ

கணபதிதுணை.

முகவுரை.

தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

சித்தந் தெளிவீர்காள், அத்த னாரூரைப்,
பத்தி மலர்தூவ, முத்தி யாகுமே.

உலாவென்பது, தமிழ்ப்பாஷைக்குரிய தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுள் ஒருவகைநூல்; ஒருதலைவன், பேதைமுதற் பேரிளம்பெண் ஈறாகிய எழுபருவமகளிர்களும், தன்னைக் கண்டு காதல்கூரும்படி வீதியிற் பவனிபோந்தானென்று கலிவெண்பாவாற் கூறல்வேண்டுமென்பது அந்நூலுக்குரிய விதி, (வீதியென்றது இங்கே உருத்திரகணிகையருடைய தெருக்களை). இதனை, "திறந்தெரிந்த பேதை முதலெழுவர் செய்கை, மறந்தயா வந்தான் மறுகென்—றறைந்தகலி வெண்பாவுலாவாம்" என்னும் வச்சணந்திமாலையால் உணர்க. இப்பிரபந்தத்தின் இலக்கண விரிவு பன்னிருபாட்டியல் முதலிய பழைய பாட்டியல்களில் விளங்கக் காணப்படும்.

தாம் வழிபடுதற்குரியகடவுளர்மீதும் தம்மை ஆதரித்த தலைவர்மீதும் பண்டைக்காலந்தொடங்கிப் பெரியோர்கள் செய்துபோந்த பற்பல உலாக்கள் இத் தமிழ்நாட்டில் வழங்கிவருகின்றன. ஆதியுலா முதலியவைகளும் மூவருலா முதலியவைகளும் மேற்கூறிய இருபகுதிகளுக்கும் முறையே உதாரணங்களாகும்; அவற்றுள்,—

திருவாரூருலாவென்பது திருவாரூரிற்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் சிவபெருமான்மீது அந்தகக்கவி வீரராகவமுதலியாரென்னும் கவிஞர்பெருமான் இயற்றியது. இதிலுள்ள கண்ணிகள் ௱௨௮.

பாட்டுடைத்தலைவராகிய திருவாரூர்ப் புற்றிடங்கொண்டபெருமானுடைய பெருங்கருணைத்திறமும் ஸ்ரீ தியாகேசாது அருமைத்திருவிளையாடல்களும் தீர்த்தவிசேடங்களும், இங்கேவழிபட்டுப் பேறுபெற்ற சிவகணங்கள், பெருந்தேவர், இந்திரன்முதலிய திக்குப்பாலகர்கள், பிற தேவர்கள், முனிவர்கள், முசுகுந்தசக்கரவர்த்திமுதலிய அரசர்கள், ஏனைய அடியார்களென்னும் இவர்களாற் பிரதிட்டிக்கப்பெற்ற மூர்த்திகளின்விசேடங்களும், வேறு தலபுராணங்களிலும் பிறநூல்களிலும் கூறப்பட்ட இத்தலசரிதங்களும் தேவாரதிருவாசகமுதலிய அருட்பாக்களிலுள்ள அருமைப்பிரயோகங்களும் வேறுள்ள தமிழ்நூற்பிரயோகங்களும், நாயன்மார்களுடைய அருமைச்செயல்களும், பலவகையான மடக்கணிகள் சிலேடைகள் கேட்டோர் வியத்தற்குரிய தொனி முதலியவைகளும், பண்டைக்காலத்தில் இத்தலத்திலிருந்த பரிகர வகையார் இன்னாரின்னாரென்பதும், பலவிதமான பணிகளைச்செய்தோர் இன்னாரின்னாரென்பதும், இன்னும் எத்தனையோ பல அரியவைகளும் இந்நூலிற் காணலாகும்.

கையெழுத்துப்பிரதிகளிற் கிடைத்த பாடபேதங்கள் அவ்வப் பக்கத்தில் அடிக்குறிப்பாக இப்புத்தகத்திற் காட்டப்பட்டுள்ளன.

எனக்குத் தோற்றியவளவு ஏதோ ஒருவாறு குறித்திருக்கும் அரும்பதவுரையை அறிஞர்கள் பொறுத்து அங்கீகரிப்பார்களென்று நம்புகிறேன்.

இந்நூல்சம்பந்தமாக அறியவேண்டியவற்றை அறிந்துகொள்ளுதற்குச் சற்றேறக்குறைய மூப்பதுவருடங்களுக்குமுன் நான் முயற்சித்தபோது என்னுடைய விருப்பத்திற்கிணங்கிச் செல்லவேண்டிய இடங்களுக்குப் பலமுறைசென்று, அறியவேண்டியவற்றைத் தக்கவர்களிடமாக அறிந்து அப்போதப்போது எழுதியனுப்பியும், இதற்குக் கருவியாகவுள்ள சில தமிழ்நூல்களைப் பிரதிசெய்தனுப்பியும் சலிப்பின்றி

உதவிபுரிந்துவந்த பண்டிதர் பின்னத்தூர் ஸ்ரீ அ. நாராயணசாமி ஐயரிடத்தும், திருவையாறு, ஸம்ஸ்கிருதகாலேஜ் தமிழ்ப்பண்டிதரான ஸ்ரீமத் உ. வே. சந்தானமையங்காரிடத்தும் மிக்க நன்றியறிவுடையேன்.

கிடைத்த இந்நூற்கையெழுத்துப்பிரதிகள்.

திருவாவடுதுறையாதீனத்துப்	பிரதி	க
ஷை ஆதீனத்து மஹாவித்வான் ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்	,,	க
கொட்டையூர் ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகரவர்கள் வீட்டுப்	,,	க
காஞ்சீபுரம் ஸ்ரீ குமரகோட்டத்துத்தருமகருத்தா ஸ்ரீவாமதேவதேசிகரவர்கள்.	,,	க

மதுரைத்தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதியாக விளங்கிய ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைஸாமித் தேவரவர்கள் விருப்பத்தின்படி செந்தமிழ்ப்பிரசுரம் பதினாறாவதாக இந்நூல், 1910-ம் வருஷத்தில் பதிப்பித்து வெளியிடப்பட்டது.

வெண்பா.

"பெருமான் றமிழ்க்கமலைப் பெம்மான்கைம் மானும்
கருமா னுரியதளுங் கச்சும்—ஒருமானும்
சங்கத் தடங்காதுந் தார்மார்புங் கண்டக்கால்
அங்கத் தடங்கா தவா" [திருவாரூர் நான்மணிமாலை.]

இங்ஙனம்,

வே. சாமிநாதையர்.

கணபதி துணை.

முக்கியமான சில குறிப்புக்கள்.

இவ்வுலாவில் நூலாசிரியர் பலபடியாக எடுத்தாண்டிருக்கும் இத்தலவிசேடமுதலியவற்றை முதலில் அறிந்துகொள்ளுதல், இந்நூலைப் படித்துப் பொருள்தெரிந்துகொள்பவர்களுக்கு இன்றியமையாதகருவியாக இருத்தலின், அவை இங்கே எழுதப்படுகின்றன.

திருவாரூரென்பது, சோழவளநாட்டிற் காவிரிநதியின் தென்பாலுள்ளதும் தேவாரம் பெற்றதுமாகிய ஒரு சிவஸ்தலம். இதற்குரிய பதிகங்கள் ௬௪; (திருஞான. பதிகம். ௫; திருநா. பதிகம். ௨௧; சுந்தர. பதிகம். ௮) திருவாசகமுதலிய பலவற்றிலும் இத்தலம் மிகப் பாராட்டிக் கூறப்பட்டுள்ளது.

திருவாரூர் அரநெறி, பரவையுண்மண்டளியென்பனவாகிய பாடல்பெற்ற வேறு இரண்டு ஸ்தலங்கள் இதனிடத்தே யுள்ளன.

திருவாரூருக்குரிய பழைய வரலாறுகளைத் தெரிவிக்குநூல்கள் வடமொழியில், கமலாலயமஹாத்மியம்முதல் க௨ நூல்களுள்ளனவென்பர். அவற்றுள், கமலாலயமஹாத்மியமும், நாகரகண்டமும், தியாகராசலீலையின் முதற்பகுதியுமே தமிழிற் செய்யுணடையாக இயற்றப்பெற்று வழங்குகின்றன. பின்னும், திருவாரூர் மும்மணிக்கோவைமுதற் பல தமிழ்ப்பிரபந்தங்களும், மிக இனியனவாகிய நூற்றுக்கணக்கான தனிப்பாடல்களும் வடமொழியிலும் தென்மொழியிலும் பலபெரியோர்களாற் செய்யப்பட்டுள்ள பற்பலஇசைப்பாட்டுக்களும் இக்காலத்து இதன்சம்பந்தமாக வழங்குகின்றன.

இத்தலத்திற்குரிய ஆகமம் காமிகம்.

இது, விராட்புருடனுடைய மூலாதாரமெனவும், பூமிதேவியின் இதயகமலமெனவும், பஞ்சபூதத்தலங்களுட் பிருதிவித்தலமெனவும், தேவர்கள் கறையான்வடிவுகொண்டியற்றிய புற்றை இடமாகக்கொண்டு பரமசிவன் சிவலிங்கப்பெருமானாகத் தோற்றினமையின் வன்மீகபுரமெனவும், தன்பாற்பிறந்தவர்களுக்கு முத்திகொடுத்தலாற் பிறக்கமுத்திதருவதென்றும், தன்னிடமுள்ள உயிர்களெல்லாம் சிவகணங்களாதலின்

ஸ்பரிசதோஷம் முதலியன இல்லாததென்றும், நன்றிகொன்ற பாவத்தையும் தீர்க்கும் பெருமைவாய்ந்ததென்றும், ஸ்ரீகாசிக்கும் தில்லைக்கும் மேலானதென்றும், ஸப்தவிடங்கத் தலங்களுள் முதலாவதென்றும், அம்பிகை தவஞ்செய்தமையின் பராசத்தித்தலமென்றும், திருமகள் வழிபட்டுப் பேறுபெற்றமையாற் கமலாலயமென்றும், வீதிவிடங்காகிய ஸ்ரீதியாகேசரெழுந்தருளியிருத்தலின் வீதிவிடங்கமென்றும் கூறப்படும்.

சோழ அரசர்கள் முடிகவித்தற்குரிய நகரங்கள் ஐந்தனுள் ஒன்றாக இருந்ததன்றி, அவர்களுடைய இராசதானியாகவுள்ளதும், சங்கரசேவகனென்னும் சோழராசனது வேண்டுகோளின்படி ஸ்ரீதியாகேசர் அரசவடிவந்தாங்கிப் பலவருடம் அரசாட்சிசெய்ததும், மனுநீதிச்சோழர் ஒரு பசுவின்குறையைத் தீர்த்தற்பொருட்டுத் தம் செல்வப்புதல்வன்மீது தேரைச்செலுத்தித் திருவருளை வெளிப்படுத்தியதும், ஸ்ரீதியாகேசர் பாதஞ்சிவக்கப் பசுந்தமிழ்வேண்டிப் பரவைதன்பால், தூதன்றுசென்ற பெருமைவாய்ந்ததும், ஸ்ரீசுந்தரமூர்த்திநாயனார் திருத்தொண்டத்தொகையை அருளிச்செய்தற்கும் தெய்வத்திருமுறைகளை வெளிப்படுத்திய ஸ்ரீஅபயகுலசேகரமகாராசா முதலியோர் அரசாட்சிசெய்தற்கும் இடமாயிருந்ததும் இத்தலமே.

கழற்சிங்கநாயனார், செருத்துணைநாயனார், சோமாசிமாறர், தண்டியடிகள்நாயனார், திருநீலகண்டயாழ்ப்பாணர், நமிநந்தியடிகள், விறன்மிண்டநாயனார் என்பவர்கள் வழிபட்டுப் பேறுபெற்ற க்ஷேத்திரமும் இதுவே.

ஸ்தலவிநாயகர்:—வாதாவிவிநாயகர், மாற்றுரைத்தவிநாயகர் முதலியோர்.

ஸ்வாமியின்திருநாமங்கள்:—புற்றிடங்கொண்டாரென்பது முதலியன.

அம்பிகைகளிருவர்:—(க) கமலாம்பிகை, (உ) அல்லியங்கோதை.

ஸ்தலத்தின் மற்றைத்திருநாமங்கள்:—கலிசெலாநகரம், சத்திபுரம், சமற்காரபுரம், தேவாசிரயம், முசுகுந்தபுரம், மூலாதாரநகரம், ஸ்ரீநகரமென்பவை முதலியன.

தீர்த்தங்கள்:—உருத்திரகோடி, கயை, சங்கதீர்த்தம், சர்வதீர்த்தம், சூரியபுட்கரணி, தேவதீர்த்தம், வாயுதீர்த்தம், விசுவாமித்திரதீர்த்த முத

லியன. இவற்றுள், தேவதீர்த்தமென்பது கமலாலயமென்றுங்கூறப்படும். இதன்நாற்புறத்தும் கூச-கட்டங்களுள்ளன. பண்டைக்காலத்தில் இதில் ஒருயாகம் நடந்தபொழுது நடுவநாயகனென்னும் சிவலிங்கப்பெருமான் பரிவாரங்களுடன் இதன் இடையே பிரதிஷ்டிக்கப்பெற்றாரென்று திரு வாரூர்மாலையால் தெரிகின்றது.

வழிபட்டுப் பேறுபெற்றோர்:—அகத்தியர், அசன், அரிச்சந்திரன், இடையனொருவன், இந்திரன், இராமன், கருணாகரத்தொண்டைமான், குலிசாராசன், கேமசருமன், கோகாணர், கோடிமுனிவர், சங்கமுனிவர், சண்டதருமன், சமற்காரவரசன், சனகாதியர்நால்வர், சித்தரொருவர், சித்தீசனென்னுமரசன், தசரதர், தசானவதேசத்தரசன், திரிசங்கு, திருடனொருவன், திருமகள், திருமால், துருவாசர், நளன், பசுவொன்று, பட்டினசாமியென்னும் வணிகன், பதஞ்சலி, பிரமர், மனுநீதிச்சோழர், முசுகுந்தசக்கரவர்த்தி, மூன்றரைக்கோடி புண்ணியதீர்த்தங்கள், மன் மதன், மேனகை, வாணாசுரன், விசுவாமித்திரரென்பவர்கள்.

ஸ்ரீவன்மீகநாதரெழுந்தருளியிருக்கும் கர்ப்பக்கிருகம் திருமூலட் டானமென்றும் பூங்கோயிலென்றும் கூறப்படும்.

ஸ்ரீதியாகராசர்:—இவர் முதலில் திருப்பாற்கடலில் திருமாலால் வழிபடப்பெற்றுப் பின்பு அவரால் இந்திரனுக்கும் பின்பு அவனால் முசுகுந்தசக்கரவர்த்திக்கும் அளிக்கப்பெற்று அப்பால் அவ்வரசனால் இத்தலத்திற்கு எழுந்தருளிபவர். இவர், அராக்கச்சையையும் ஆட ரவக்கிண்கிணிக்காலையும் தியாகவிநோதமென்னும் பரிவட்டத்தையும் உடைவாளையும் உதாபந்தனத்தையும், வீரகண்டயமென்னும் வாளையும் தலைச்சீராவையு முடையவர். மேற்கூறிய பரிவட்டம் ஐந்துகோடுகளை யுடையதாய்த் தியாகவன்னமெனவும் இக்காலத்தில் வழங்கும்.

இவருடைய திருநாமங்கள்:—அசைந்தாடியபெருமான், அடிக் காயிரம்பொன்னளிப்பவர் அந்தியும் சந்தியு மாடுவார், இரத்தினசிங்காத னாதிபதி, இருந்தாடழகர், கம்பிக்காதழகர், கருணாகரத்தொண்டைமான், கனகத்தியாகேசர், கிண்கிணிக்காலழகர், செங்கழுநீர்த்தாமர், செம் பொற்சிங்காதனாதிபதி, செவ்வந்தித்தாமர், செவ்வந்தித்தோட்டழகர், தியாகசிந்தாமணி, தியாகப்பெருமாள், தியாகப்பெருமான், திருவந்திக் காப்பழகர், மணித்தண்டி லசைந்தாடியபெருமான், முன்னினும்பின்னழ

கர், வள்ளல், வீதிவிடங்கப்பெருமானென்பனவும் இவற்றின் பரியாயப் பெயர்களுமாம்.

திருவிழா:—மாதந்தோறும் இதில் நடைபெறுமாயினும் மார்கழி மாதத்திலும் பங்குனிமாதத்திலும் நடைபெறுந் திருவிழாக்கள் மிக்க விசேடமுடையன; "முத்துவிதானம்" என்னும் தேவாரப்பதிகத்தால், மார்கழித்திருவாதிரைத்திருவிழாவின்பெருமை நன்கு புலப்படும்.

பாததரிசனம்:—மார்கழித் திருவாதிரையும் பங்குனியுத்தரமும் ஸ்ரீதியாகேசருடைய பாததரிசனத்திற்குரிய விசேடகாலங்கள்.

இவருடைய நடனம்:—ஹம்ஸநடனம், அஜபாநடனம், நாதாந்த நடனம், புயங்கநடனமென்று பாராட்டப்பெறும்.

தேவசபை:—இது தியாகேசர் எழுந்தருளியிருக்குமிடம்.

திருச்சாலகம்:—இது தென்றல் தவழ்ந்துவருதற்கு ஸ்ரீதியாகேச ருக்கு நேரே தென்பாற்சுவரில் அமைக்கப்பெற்றுள்ள கற்பல்கணி.

வாத்தியங்கள்:—சுத்தமத்தளம், பஞ்சவாத்தியங்கள், பஞ்சானன முரசு முதலியன.

மாணிக்கத்தண்டு: இஃது இவரை எழுந்தருளப்பண்ணும் பிள்ளைத் தண்டு அல்லது திருவாடுதண்டிற்கு உரியபெயராக அமைந்துள்ளது.

பச்சைக்கருப்பூரம்:— மற்றைத்தலங்களில் ஸ்வாமி திருத்தேருக்கு எழுந்தருளுந்தினத்தின் முதல்நாளில் கிருஷ்ணகந்தம் சாத்தப்படுவது போல் இவருக்கு ஷை தினத்திற் பச்சைக்கருப்பூரம் சாத்துதல் மரபு.

தியாகக்கொடி:—இவருடைய துவசம் இப்பெயரால் வழங்கும்.

ஆழித்தேர்:—இஃது இவருடைய திருத்தேரின் திருநாமம்.

இடபதேவர்:—இவர் தியாகேசருடைய சந்நிதியிலுள்ள திருநந்தி தேவர், நின்ற திருக்கோலமாகவே உள்ளார்.

திருவந்திக்காப்பு:—இவருடைய ஆராதனைக் காலங்களுள் திருவந் திக்காப்பு மிக்கவிசேடமுடையதென்பர்.

தேவாசிரயம்:—தரிசனத்திற்குவரும் தேவர்கள் முதலியோர் சமயம்பார்த்துக்கொண்டு தங்கியிருத்தற்கு முன்பு இடமாக இருந்ததென் றும், அந்தஇடத்தில் இப்பொழுது ஆயிரக்கால்மண்டபமுள்ளதென் றும் சொல்லுவர்.

திருவீதிகள்:—(௧) அடிமுடிநேடிய திருவீதி, (௨) செந்தாமரை நாறியதிருவீதி, (௩) பொன்பரப்பிய திருவீதி, (௪) புகழாபரணத்திரு வீதி என்று சில திருவீதிகளின் பெயர்கள் இத்தலத்தில் வழங்கும்.

ஐந்துவேலி:—இத்தலத்திற் கோயில், குளம், செங்கழுநீரோடை என்பவற்றுள் ஒவ்வொன்றும் ஐவைந்து வேலியாக உள்ளதென்பர்.

மேற்காட்டிய தலவிசேடங்கள்முதலியவற்றுட் பெரும்பாலன வற்றை இந்நூலாசிரியர் இந்நூலுள் அங்கங்கே அமைத்திருக்கும பகுதிகளும், திருவிழாவில் ஸ்ரீ தியாகேசருடன்வருவோர்களின் இயல்பு களைத் தனித்தனியே எடுத்துக்காட்டிப் பாராட்டியிருக்கும் நயங்களும், பேதைமுதலிய பருவமகளிரெழுவரையும் அவ்வப்பருவத்திற்கேற்பச் சிறந்தகருத்துக்கள் தொனிக்கும்படி வருணித்திருக்கும் பகுதிகளும் அவர்கள் ஸ்ரீ தியாகேசரைத் தரிசித்து அவரைப்பாராட்டிப் பிரார்த்தித் தனவாக அமைத்திருக்கும் பகுதிகளும், அவற்றுள் தெரிவைப்பெண் கூறியனவாக, "போகமார்த்த" என்னும் பதிகமுதலியவற்றை ஓதினால், வாடைக்காற்றாலுண்டாகும் வெப்பம்முதலியவை நீங்குமேயென்று அமைத்திருக்கும் பகுதிகளும், அம்மானைமுதலியவிளையாட்டுக்களை ஆடுமகளிரைநோக்கி, திருவாசகத்திலுள்ள அம்மானை, திருச்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல், குயிர்பத்துமுதலியவற்றைப் பாடிஉய்ம்மினென்று பேரிளம்பெண் கூறுவனவாகவுள்ள பகுதியும், சிவபக்தவாணியென்னுங் கிளி, பேரிளம்பெண்ணைநோக்கி அவளுடைய ஆயத்தார்களின் கேசாதி பாதவருணனையைக் கூறியதாகத் தனியடியாரும் தொகையடியாருமாகிய நாயன்மார்கள் எழுபத்திருவருடைய அருமைச்செயல்கள் முதலிய வற்றை எடுத்துக்காட்டியிருக்கும் பொழுதும், ஸ்ரீ சுந்தரமூர்த்திநாயனா ரதுவேண்டுகோளின்படி ஸ்ரீ சோமாசிமாற நாயனாருடைய யாகத்திற்கு ஸ்ரீ தியாகேசர் நீசவடிவங்கொண்டு எழுந்தருளிய கருணைப்பெருக்கைப் பலபடப் பாராட்டியிருக்கும் அருமையும் படித்து இன்புறற்பாலன.

"விரகன்முத் தமிழ்க்கவி வீர ராகவன்
வரகவி மாலையை மதிக்கும் போதெலாம்
உரகனும் வாணனு மொக்கக் கூடினாற்
சிரகர சம்பிதஞ் செய்ய லாகுமே."

ஸ்ரீ தியாகேசர் திருவடிக்கமலங்கள் துணை.

திருவாரூருலா.

காப்பு.

வாதாவிவிநாயகர்துதி.

*கமலைக் கருள்செய் கமலைத்யா கேசர்
கமலைத் திருவுலாக் காப்பாம் —†கமலைவயன்
மீதாவி வேழமுக மீன்குதிக்கு மப்பதியில்
வாதாவி வேழமுக வன்.

மாற்றுரைத்தவிநாயகர்துதி.

பாந்த ளணியணிந்த பாலொத்த மென்மொழியாள்
காந்தர்தியா கேசருலாக் காப்பாகும்—பூந்தாளிற்
போற்றுரைத்த வாரணமே பொற்சிலம்பாங் கைச்சிலம்பு
மாற்றுரைத்த வாரணமே வந்து.

அவையடக்கம்.

‡ஆதியுலா வாவூருகு மாரூ ரணைத்தமியே
ஞோதியுலா வாவூருக்க வுன்னினேன்—சோதிகையு
மாநாக மூங்குழைக்கு மாமேரு வெற்பையொரு
§பூநாக மூங்குழைத்தல் போன்ம்.

நூல்.

க. நீர்பூத்த தாமரையி னிற்குந்தே வாதியா
வேர்பூத்த வொன்பா னெனும்பேறுய்ச்—சீர்பூத்த

(பாடபேதம்)

* ‘அமலைக் கொருபாக ராரூர்த் தியாகர்’
† ‘கமல வயன்.’
‡ ‘ஆதியுலா வாவூருக்கும்’
§ ‘பூநாக மூங்குழைத்தல் போல்’

௨. வேதாந்த மேதெளிந்த சைவ விழுப்பொருளாய்
நாதாந்த பேயாய் நடிக்கின்றோன் — வேத

௩. முறைமையா லோது முதுபரா சத்திக்
கிறைமையா மெல்லைக் கிறையோ — னிறைவி

௪. லொருதலையி னானு மொருதலையிற் சாய்ந்த
வரிதலையுஞ் சேதிப்ப தாகக் — கருதிய

௫. வானோர் சிதலாய் வரும்புற்றில் வந்நந்த
வானோ ருளத்துளக்க மாற்றினோன் — போனநாண்

௬. வில்லை மகபதிக்கு வில்லாம் படிதந்து
முல்லை யரிக்கு முடிதந்தோன் — றொல்லைச்

௭. சனகர் முதன்முனிவர் சாரக் கலிதீர்த்
தனக வொளியு மளித்தோன் — வினைகழிப்ப

௮. வார்த்த முடிக்கங்கை யாழ்ந்தே யெழுந்தேவ
தீர்த்த மலம்புகுண தீரத்தோ — னீர்த்த

௯. வொருசங்க மாமுனிவ னெண்கை யிரண்டும்
வருசங்க தீர்த்த மருங்கோன் — பொருசங்க

௧0. வேலைக் கமலை புகுந்திறைஞ்ச வேட்டதிரு
மாலைப் புணர்த்த வரத்தினோன் — காலை

௧௧. வருங்கம லாலயப்பெண் வந்திப்பத் தன்னூர்க்
கிருங்கம லாலயப்பே ரிட்டோன் — பெருங்கண்ணன்

௧௨. செய்யுங் கருத்து முடித்த திருவுருவா
யுய்யுஞ் சுரரரசுக் கோரரசா — யெய்தியவண்

௧௩. பண்டு பணிப்பப் பணிந்து முசுகுந்தன்
கொண்டு வரக்கமலை கோயிலா — வொண்டொடிக்கை

௧௪. மானுமொரு செவ்வேளு மானுமழு வுந்தரித்த
தானுமொரு சிங்கா தனத்திருந்தோன் — மாநகரை

௧௫. மேய்ந்து வலம்புரிந்த மெய்க்கோவு மக்கோவை
யாய்ந்து வலம்புரிந்த வாடவனும் — போந்து

௧௬. மதியி னமைச்சனு மன்னுமெனச் செய்து
கதியும் வழங்கு கழலோன் — முதுவன

(பா-ம்) ௨. 'வேதாந்தத் திற்றெளிந்த சைவ விழுப்பொருளின்'
௫. 'உளத்துக்கம்'
௧௨. 'சுரவரசுக்கு'
௧௨-௧௩. 'எய்தியவர், பண்டு பணியப்'
௧௬. 'மதியு மமைச்சனும்'

௧௭. றிரிசங்கு கோடிபடு தேவதீர்த் தத்தாற்
றிரிசங்கு மெய்சேரச் சேர்த்தோன்—சுருதியன்வாய்க்

௧௮. கள்வினையு முள்ளாவி காரி விருத்திரனைக்
கொள்வினையு மந்நீரிற் கோவித்தோ—னள்வினைப்பேய்க்

௧௯. கந்தக் கயையா லருநன்றி கொன்றமையு
மிந்தக் கயையா லினிதறுத்தோன்—செந்திருத்தா

௨0. டேடிப்பண் டோடி வருமறையோர் செய்வணக்கங்
கோடிக்குங் கோடியாங் கோலத்தோ—னேடுந்தேர்ப்

௨௧. பத்தன் மகப்பேறு கூறினேன் பண்டொரு
சித்தன் மகப்பேறு சிந்தித்தோன்—முத்தி

௨௨. பொருகோபக் கூற்றுலகிற் போயாவி மீண்ட
விருகோ காணர்க்கு மீந்தோன்—முருகு

௨௩. பொலிசித் திரகாயப் பொற்காய வேந்தாற்
குலிசித் திரநாமங் கொண்டோன்—கவிபயந்து

௨௪. முத்தீர்த்த சிகாத்து மூன்றரைக் கோடியா
மத்தீர்த்தம் புக்க வபயத்தோ—னித்தகைய

௨௫. வூரெல்லை கொண்டநா ளும்பர்க்கு மிம்பர்க்கும்
பேரெல்லை தோன்றாப் பெரும்பெருமா—னேரேழுஞ்

௨௬. சோதி விடங்கமே யாயினுந் தொன்மையாம்
வீதி விடங்கமே மேவினோன்—போதமே

௨௭. யண்ணமணித் தண்டி லசைந்தா டியபெருமா
டண்ணமணிச் சிங்கா தனப்பெருமாள்—விண்ணோர்

௨௮. திருமாளா தாட்கொண்ட தேவ ரகண்டப்
பெருமா டியாகப் பெருமாள்—விரிபுவன

௨௯. முற்றத் தழைப்ப மூதியவிதிக் காமிகத்திற்
கொற்றத் தியாகக் கொடியேற்றிச்—சுற்றெங்கும்

௩0. வம்மின் றியாகர் மலர்ச்சே வடிவணக்கஞ்
செய்ம்மி னெனவனந்தந் தேவர்க்குந்—தம்முறைபின்

(பா-ம்) ௨௧. 'மகப்பேறுங் கூறினேன்'
,, 'மகப்பேறுஞ் சிந்தித்தோன்'
௨௩. 'குலிசித் திருநாமம்'
,, 'கலியாய்ந்து'
௨௪. 'அவயத்தோன்'
௨௫. 'ஊரெல்லை கண்டநாள்'
௩0. 'வம்மின்றியா கேசர்'

௩௧. மிக்குத் திருத்தூதே விட்ட திருமுகமே
திக்குத் தொறும்போந் திருநாளிற்—புக்கிறைஞ்சுந்

௩௨. தேவரைவாழ் வித்துத் தெரிசிக்கப் பிந்திவருந்
தேவரைவா திக்குந் திருநாளிற்—றேவர்த

௩௩. மம்பொன் மகுட மடர்ந்து திருக் காவணத்துச்
செம்பொ னிரம்புந் திருநாளி—லம்பரத்துச்

௩௪. சோனைக் கெதிராச் சொரிபொற் படிதெய்வச்
சேனைக் களக்குந் திருநாளின்—ஞானத்துப்

௩௫. பாவித்தோர் கிண்கிணிக்கால் பங்குனி யுத்தரத்தே
சேவித்தோர் முத்தித் திருநாளிற்—பூவிற்

௩௬. கலித்தகட லேழுங் கமலையிற்புக் கென்ன
வொலித்ததிரு நாளி லொருநாட்—கொலைக்குவ்வை

௩௭. யீந்துந் தனதுமகட் கின்ப மணம்புணர்த்த
தாய்ந்து திருமருக னாகத்தே—தோய்ந்த

௩௮. கனமணி வாங்கிக் கடல்கொடுப்ப தென்னத்
தினமணி வந்து தயஞ் செய்ய—முனையி

௩௯. னடன்மேய சேயரிக்க ணல்லியங் கோதை
யுடன்மேய பள்ளி யுணர்ந்து—படியின்

௪0. முழுப்புணரி யுள்ளிரண்டு முற்றுமற மற்றை
விழுப்புணரி யைந்தும்போய் வீழ—மொழுக்கென்ன

௪௧. நெய்யுந் ததியு நிறைபாலுந் தேனுநறை
பெய்யும் புனலும் பெரிதாடிப்—பொய்யா

௪௨. மறையாதி சைவர் வகுத்த வகையிற்
குறையாது செய்பூசை கொண்டு—பொறைவில்லுங்

௪௩. கோட்டிக் கணைக்கணையாய்க் கோடாத தேர்சுமந்து
காட்டித் திருந்துதிருக் காப்பணிந்து—கோட்டுமையா

௪௪. ளையு மருங்கொத்த நண்பாற் பெருமாற்குச்
செய்யு மிதுவே சிறப்பென்னப்—பையக்

௪௫. கனைய மறைநூலிற் கஞ்ச னிழைத்த
தனைய திருத்தூ சணிந்து—கனகவுடை

௪௬. வாளு மராக்கச்சும் வாளரவும் போய்வளைத்த
கோளு மருளிக் கொளவீக்கி—வாளிரவி

(பாடம்) ௩௧. 'மிக்குத் திரிதூது'
௩௪. 'பொற்பொடி'
௪௧. 'ததிபாலுந் தேனு நிறைநறையிற்'
௪௬. 'வாளராய் போய்மறைத்த, கோளுமருவிக்'

சஎ. வன்னச் சடில மதியோடு பங்குபிடித்
தென்னக் கிரீட மினிதேற்றித்—தன்னுழையு

சஅ. மேற்றிய காப்பு மெதிர மதியிரண்டு
தோற்றியெனச் செவ்வந்தித் தோடேந்தி—யாற்றிய

சகூ. வாலமணிக் கண்டத் துமையமைத்த வங்கையெனச்
சாலமணிக் கண்ட சரம்பூண்டு—மேலுரகன்

ரு0. றூங்கு மொருமடந்தை தந்தைகாந் தன்பிறப்புத்
தாங்கு முறுப்பைத் தழீஇயென்ன—தூங்கு

ருக. மிலயப் புயங்கத் தசையுமிணைத் தோளில்
வலயப் புயங்கம் வயக்கிப்—பொலன்மிடற்று

ருஉ. மஞ்சி னிழிந்த மழைக்கொழுந் தாரையென
விஞ்சு புரிநூலை மேலமைத்துக்—கஞ்சக்

ருங. குருகங்கை நாயகி கொங்கைத் தழும்புக்
கொருகங்கை நாயகி யூடித்—திருமார்பிற்

ருச. பார்த்தமையு நக்கமையும் பாய்ந்தென்னச் செங்கழுநீர்
சேர்த்தமையு முத்துஞ் சிலபூண்டு—மார்த்தாண்டன்

ருரு. முன்னந் தனைமறைத்த முன்னூற் கொருதிகிரி
யினைங் கொடாமைக் கிருகாமுந்—துணிப்

ருசு. பிடித்து வணங்கியெனப் பேருலகம் விற்குந்
தடித்து மணிக்கடகந் தாங்கி—நொடித்தமிழி

ருஎ. லுந்தி யெனும்பெயரா லுந்தியுந்தன் பூதத்தாற்
சிந்தி நுரை திரைக்குஞ் செய்கைபோற்—பந்தி

ருஅ. மருவுதா முத்தின் வருக்க நிரைத்த
திருவுதா பந்தனமுஞ் சேர்த்தி—யொருபொதுவின்

ருகூ. மீது குனிப்ப வியர்த்து பதஞ்சலிதான்
போது மெனச்சரணம் பூண்டென்னப்—பாதத்தி

(பா-ம்) சஅ. 'தோடணிந்தே, யாற்றரிய'
சகூ. 'மணிகண்டத்து'
,, 'மணிகண்ட சரம்பூட்டி'
ரு0. 'பிறப்பைத்'
ருக. 'புயங்கத் திசையும்'
,, 'புயங்கந் ததையும்'
ருச. 'சிலசூடி'
ருஎ. 'சிந்து நுரை திரைக்குஞ் சீர்போலப்'
ருஅ. 'பந்த வருக்க நெருக்கும்'

சுo. லாடிய பாம்பு மரிபெறுத் தன்பேறு
பாடிய கிண்கிணியும் பந்தித்து—நீடிய

சுக. நீலத் தரிவணங்க நின்றநாட் பாற்கடலின்
கோலத் துளிபொதுளிக் கொண்டதோ—மாலுக்

சுஉ. கடியை யறிய வரியதிரு மேனி
நெடிய தழல்பூத்த நீறோ—கடவுளுக்கு

சுந. வண்ணந் திருவந்தி வண்ண மெனும்படிக்குத்
தண்ணம் பெருநிலவு தந்ததோ—வண்ணலைப்

சுச. பேர்முத் தாணி பணியும் பொழுதெவர்க்கும்
வேர்முத் தெனக்காட்டு மெய்க்காட்டோ—மாமலையின்

சுரு. மங்கை யொருபாற் கலந்தமைக்கு மாறேற்ற
கங்கை முழுதுங் கலந்ததோ—வங்கெதிரே

சுசு. சார்ந்த திகம்பரத்தாற் றூரு வனமடவார்
கூர்ந்த நகைவெள்ளங் கோத்ததோ—காந்தி

சுஎ. திவளப் பொலிவதெனச் செந்திருமெய் யெங்குந்
தவளக் கருப்பூரஞ் சாத்திப்—பவளநிறம்

சுஅ. போர்த்த பனிதப் புதுமதியூர் கொண்டென்னச்
சேர்த்த திருவா சிகைசாத்தி—யேத்தி

சுகூ. யெனைத்தவஞ் செய்த விடப்பா லுமைக்கு
நனைத்தண் மகுட நதிக்கு—முனைத்தகண்

எo. ணேறு சுடர்க்கும்பே றென்னினு மென்னதவப்
பேறு முழுதுமிது பெற்றதென—நீறணிவா

எக. ஞேங்கழலு மீது மூலோக குலமதனுற்
றூங்கலு முண்டுகொலோ தாயமென—வாங்குச

எஉ. சுருதிநிலைக் கண்ணாடித் தோன்றரியான் றோன்றப்
பருதிநிலைக் கண்ணாடி பார்த்துச்—சுருதியும்

எந. வேத வனமடைத்தோன் மேனு ளதுதிறந்தோன்
றாத னெனவிடுத்தோன் சொற்பாட்டுங்—காதலித்து

(பா-ம்) சுரு. 'கலந்தமைக்கு மாறாகக்'

சுஎ. 'தவளத் திருச்சாந்து'

சுஅ. 'கோத்த திருவா சிகைகோட்டி'

சுகூ. 'எனைத்தவஞ் செய்தும்'

எக. 'தாயமெனப்—பாங்கின்'

எஉ—எந. 'சுருதியுடன், மூவர்தே வார முதலாக வோரைந்து, தேவ வருண் மாலை செவிசாத்தி—யாவர்களுநங், கல்லென்னும்'

எந. 'சொற்பாட்டு—நாதற்கு'

எச. நானூறு காரிகையை நல்கினேன் வாசகமுந்
தேனூறு மாறு செவிசாத்தி—வானூடர்

எரு. கல்லென்னும் வெள்ளக் கதிவிலக்குங் கைப்பிரம்பிற்
கல்லென்னு மூண்டியான் கான்மூளையும்—வில்விசயன்

எசா. செம்மலுக்குத் தோள்கொடுத்த செம்மலைப் பினுங்கழித்த
செம்மலுக்குத் தோள்கொடுத்த செம்மலு—நம்மயிலைப்

எஎ. பெண்ணையே யென்பினாற் பெற்றுப் பெருந்தவாண்
பெண்ணையே பெண்ணாகப் பெற்றோனு—முண்ணப்போ

எஅ. யப்பூதி யந்துறந்த வாருயிரைத் திங்களூ
ரப்பூதி மைந்தற் களித்தோனு—மெப்போது

எகூ. மப்பரவை யிட்ட வவிர்சடையோன் றாதினு
லப்பரவை யிட்ட மடுத்தோனுஞ்—செப்பரிய

அ0. வஞ்சப்பு வாசி யகற்றினேன் முன்கொணர
வஞ்சம்பு வாசி யழைத்தோனுந்—துஞ்சமனி

அக. யம்பர்க்குப் போதற் கருமைப் பெருமானை
யம்பர்க்குப் போதற் கழைத்தோனு—நம்பற்குக்

அஉ. காற்சிலம்பின் சந்தணிந்து கண்ணி யணிந்துதினங்
காற்சிலம்பு கேட்ட திருக் காதோனு—நூற்சிலம்பக்

அங. கற்றூவிக் காவிக் கமலைவாய்த் தன்மகவைக்
கற்றூவிக் காவி களைந்தோனுஞ்—சற்றேனு

அச. மெள்வா யலைநீ யிறைக்கடிமை யாக்குமெனி
னெள்வா யுமிழெனக்கு மென்றோனு—முள்வாய்ப்

அரு. பிறங்குதிருத் தொண்டைப் பெருக்குந் தொழிற்குக்
கறங்குதிருத் தொண்டக் கடலுந்—திறங்கொள்

(பா-ம்) எஎ. ‘பெண்ணைப்பெண் ணுக்கு பெருந்தகையும்’
எஅ. ‘அப்பூதி யார்க்களித்த வண்ணலும்’
எகூ. ‘அப்பரவை யிட்டஞ்சே ரண்டகையுஞ்
அ0. ‘அஞ்சம்பு வாசியழை யாளரியுந்
அக. ‘அழைமுதலும்’
அஉ. ‘காதிறையும்’
அங. ‘கற்றூவுக் காவிக் கமலைவாய்’
,, ‘கற்றூவுக் காவி களைமனுவுஞ்’
அச. ‘எனக்கிக னேர்தலும்’
அரு. ‘திருத் தொண்டைப் பெருக்குந்’

அசு. பசுபாச நீக்கிப் பதியாக்கு ஞான
விசைவார்சந் தான ரெவரு—மிசைதேன்

அஎ. மிசையுஞ்செவ் வந்தியின் வெண்ணிலா வெண்டோ
டசையுங்கம் பிக்கரதி னானை—முசுகுந்தன்

அஅ. பொன்னாட்டி னுங்கொணர்நாட் பொற்கோயிற் காணிக்கு
முன்னாட்டுந் தான முதன்மையருஞ்—சொன்னாட்டுஞ்

அகூ. சைவச் சுருதித் தலைவரும் பல்கோடி
தெய்வப் பரிகாரத்துச் சேயோரும்—பெய்வானு

கூ0. நந்தெறியு மேழ்கடலு நக்கி யெழுகுவடும்
பந்தெறியும் பூத பதாதியு—மெந்தைதிரு

கூக. நீற்றோடு மஞ்செழுத்தி னெஞ்சோடு நெக்குருகும்
போற்றோடு மீண்டிப் புறம்போர்ப்பக்—கூற்றை

கூஉ. யழலு முளரி யகக்கோளர் பந்தர்
நிழலு மருகு நிழற்ற—முழவியம்ப

கூங. முட்ட வமரர் முடிபணியத் தண்டேறி
விட்டதிரு வாயில் வெளிப்பட்டு—நெட்டகிலந்

கூச. தேரா யெடுப்பளவோ சேமப் படைதொடுப்பக்
காராய வண்ணக் கணைகோடி—மேருவிற்

கூரு. கோடி யுரக குணங்கோடி கூடிடினுஞ்
சூடி யொருநொடியிற் சூழ்போதும்—பீடுகெழீஇ

கூசு. யன்றைத்தே ராழிக் கடும்பகைமைச் சேடனை
யின்றைத்தே ராழி யிரித்தென்னத்—துன்றி

கூஎ. யெரிகின்ற வோரா யிரஞ்சுடிகை சோரத்
திரிகின்ற நேமி திகழ்ந்து—சுரநதியு

கூஅ. மாய மதியு மரன்முடிக்கோ பங்கென்னுஞ்
சேய பெரிய திருத்தேரி—னேயர்

(பா-ம்) அசு. 'இசைவாஞ்சந் தானர்'
அகூ. 'சுருதித் தவரும் பலகோடி'
கூக. 'அஞ்செழுத்து நெஞ்சோடும்'
,, 'புறம்பொற்ப'
கூஉ. 'நிழலு மருங்கும்'
கூங. 'முடிபடிய'
கூச. 'சேமப் படைகொடுப்ப'
கூரு. 'சூடித் திருவீதி'
கூஅ. 'அரன் முடித்தற் கொக்குமெனுஞ்'
,, 'சேயபே ராழித் திருத்தேரின்'

௯௯. விசைய மனக்கமலம் விண்டசைய வெண்டிக்
கசைய வசையவசைந் தாடித்—திசைகவிந்த

௧௦௦. விண்புதையத் தூபத்தால் விண்ணோர் மலர்மழையான்
மண்புதையத் தேவியொடும் வந்தேறி—யொண்புணரிப்

௧௦௧. பூசை யுவந்திங்குப் போந்தோனுக் கங்குதித்த
வாசை மதிநிழற்று மாறென்ன—வீசு

௧௦௨. மவிகைதொடநின்று ரண்டத் தளவுங்
கவிகை நிலவு கதிப்ப—வவியா

௧௦௩. விரிவிழித்தீக் கொண்டெய்யும் வேளிறப்ப வின்ன
மெரிவிழித்தீ மூட்டுமா றென்னக்—கருவிழிகள்

௧௦௪. வேலால மொத்தார்கள் வெண்கவரி வீசவிரு
பாலால வட்டம் பணிமாற—வேலை

௧௦௫. தருகொடியை மார்பகத்துத் தண்புயத்து ஞாலத்
தொருகொடியை வைத்தகொடி யோங்க—விருமருங்குஞ்

௧௦௬. சேயோ ரிருவர் திருவா ளுவுமயிலு
மேயோ ரிருவ ரிருபுள்ளுங்—காயு

௧௦௭. மருக்க ரிரதமீ ராறு முடிவெள்
ளெருக்கர் பதினொ ரெருது—மருத்துவராய்

௧௦௮. நீடிருவ ரெண்மர் நிலாவொருவ ரைம்முனிவ
ரோடிருவர் மானமீ ரொன்பதும்—பாடுமிரு

௧௦௯. காரிப் பெயரோர் கருணா ளியுங்களிறும்
வாரிப் பணையோன் மலைக்காலு—மோரெட்டு

௧௧௦. வேந்தர் கரிவருடை மேதி நரர்மகரம்
பாய்ந்த கலைபுட் பகமேறு—மூர்ந்துவர

௧௧௧. நாகர் கருடர் நவசித்தர் கிம்புருடர்
போக ரியக்கர் பொறியாக—ராகநறுந்

௧௧௨. தாமப்பூந் தேனூற் றலங்குழையக் கீழ்வீழ்ந்த
வேமப்பூண் கொள்ளரிய தென்றேக—வாமத்

௧௧௩. தருவி வரைப்பிறந்த வன்னத்தின் முன்னு
மருவிய கங்கை மருங்குந்—திருமகளு

௧௧௪. மண்மகளு நாமகளும் வான்மகளு மூன்றுதிருக்
கண்மகளும் பொற்றிகிரிக் கைம்மகளுந்—திண்மை

(பா-ம்) ௯௯. ‘திசைகவித்த’ ௧௦௪. ‘ஒத்தார்கை’
௧௦௦. ‘வந்தேறிப்—பெண்புரியும்’ ௧௧௦. ‘நரமகரம்’
௧௦௧. ‘வாசி மதி’

கக௫. யெழுமா தருந்தீர்த்தத் தெண்ணின்மின் னாருந்
தொழுமா தாவினராய்ச் சூழக்—குழையின்

கக௬. மிசைத்தேன்செவ் வந்தியின் வெண்டோட்டு வண்டோ
டிசைத்தே னிருவ ரிறைப்ப—விசித்த

கக௭. குடமுழவு துந்துமி கொக்கரை தக்கை
தடமுழவி பேரி தடாரி—நடமுருடு

கக௮. கல்ல வடமொந்தை கல்லலகு சல்லரி
வல்ல படகம் வளைதாள—நல்யா

கக௯. ழகடு சிறிய துடி யாதிய வான
முகடு மதிர முழங்க—மகுடத்

க௨0. தலையன் கொணரத் தருநாட்டி னும்பூ
வலையந் தனில்வந்தான் வந்தான்—கலியி

க௨க. னுகத்துக் கரிய வொருமறையோ னம்பர்
மகத்துக்கு முன்வந்தான் வந்தான்—சகத்தோர்

க௨௨. தனையளவு காணாத தாளாற் பாவை
மனையளவு போய்வந்தான் வந்தான்—முனைவர்

க௨௩. தெரிசனசிங் காதனத்தே செம்பொற் றியாகம்
வரிசை தரவந்தான் வந்தான்—சிரமிழந்த

க௨௪. மாய னுயிர்திருப்ப வந்தான்வந் தானெனமுன்
சேய திருச்சின்னஞ் சேவிப்ப—வாயிற்

க௨௫. சிறுகு மெழுகடலித் தேர்ப்பவனிக் கென்ன
மறுகு புாள வாலுங்—குறுகித்

க௨௬. திருமாலை முன்சேரச் சேர்த்தமைக்குச் செல்வி
வருமால யத்துமட வாரு—மரிமகனை

க௨௭. நிந்தித் துமையா ளிடுஞ்சாப நீக்கியது
சிந்தித் தவனூர்த் தெரிவையரும்—வந்தொருவன்

க௨௮. மேனகையை முன்சபித்த வெண்ணரையின் போக்கறிந்து
மானகரிற் பொன்னாட்டு மங்கையரு—நான்முகற்கி

க௨௯. யாக முடிய விடையிலொரு பெண்புணர்த்த
போக மகிழ்ந்தவனூர்ப் பூவையரு—மேக

க௩0. வொருவிஞ் சையன்விடுத்தூ தோதிரே னென்ன
வருவிஞ் சையர்மாத ராரும்—புரிசைவட

(பா-ம்) கக௭. 'நடைமுருடு' க௨௨. 'முனிவர்' க௨௮. 'மேனகையைச் சாபித்த' க௩0. 'ஓதிரேனென் றென்று'

௧௩௧. வாயிலா னீலகண்டப் பாணர் வரவழைத்த
சாயலார் கந்தருவத் தையலரும்—போயிறைஞ்ச

௧௩௨. வேதர் தலைத்தலையின் மேற்படியென் றிப்படியின்
மாதர் தொகையின் வகையோரு—நாதன்

௧௩௩. களத்திருளை வெல்லக் கணங்கூடு கின்ற
வளத்திருளைப் போலளகம் வாய்ப்ப—முளைத்திங்கட்

௧௩௪. கோடி யெனவெமையுங் கொள்ளுமென்று சென்றவெனக்
கோடிய நெற்றிக் குலமிலங்க—வோடி

௧௩௫. யிடமா னெனத்தமையு மேந்துமெனப் போந்த
மடமா னெனக்கண் மதர்ப்ப—வுடனே

௧௩௬. நறையமுத மிங்கிருக்க நஞ்சுண்ட தென்னென்
றறைவ தெனக்கனிவா யாடப்—பெறுவேயும்

௧௩௭. வேய்முத்துந் தத்தமக்கு மெய்யுறவா வெய்தியென
வாய்முத்துந் தோள்வேயும் வந்தெறிப்பக்—காமித்து

௧௩௮. வைத்த தலைவி வருமாபி யாமென்று
மொய்த்த மலைபோன் முலைபணைப்பக்—கைத்தலத்தே

௧௩௯. மன்னுந் துடிபோன் மகிழ்ந்துதொடு மெங்களையு
மென்னுந் துடிபோ லிடைநுடங்கத்—தென்னாரூ

௧௪௦. ரானந்தர்க் கெம்மை யணிந்துய்ந்தா ருண்டென்று
தேனந்தக் கஞ்சந் தெளிர்ப்பதெனப்—பானு

௧௪௧. நிழற்றும் பருவ நிறத்தா மரைக்கை
மிழற்றுங் குருகுவாய் விம்ம—வெழிற்றெருவு

௧௪௨. மன்று மணிமதிலு மாடமு மாடகச்செய்
குன்று முழுகக் குழாமீண்டி—நின்றிருபாற்

௧௪௩. பொங்கும் பகீரதியும் பூத்தனைய திங்களுந்
தங்கும் பவளச் சடைக்காடு—மெங்குஞ்

௧௪௪. சிவந்த திருநுதலுந் திக்கிருளை நக்கி
நிவந்ததிரு நீற்று நிலாவும்—பவந்தொலைய

௧௪௫. வவ்வந்திப் போது மதிமுகமு முக்கண்ணுஞ்
செவ்வந்தித் தோடுந் திருக்காதுஞ்—சைவமுடன்

(பா-ம்) ௧௩௨. ‘மெய்ப்படியென் றிப்படியின்’ ௧௪௦. ‘கஞ்சந் தெழிப்பதென’ ,, ‘கஞ்சந் தெளித்தென்ன’
௧௩௭. ‘மெய்யுறவே யெய்தியென’ ௧௪௧. ‘நிழற்றெருவும்’ ௧௪௩. ‘பகீரதியிற் பூத்தனைய’

௧௪௬. வேத மணக்கும் விழுச்செங் கனிவாயுஞ்
சீத முறுவற் சிறுமுகிழ்ப்பு—மூதண்டந்

௧௪௭. தீராது காத்த திருநீல கண்டமுஞ்
சோராத நாகத் தொடித்தோளு—மார்பாரச்

௧௪௮. சார்த்திய செவ்வந்தித் தாருங் கழுநீருஞ்
சேர்த்திய வெண்பளிதச் சேதகமும்—பூத்த

௧௪௯. வனசக் கானமைந்த மானு மழுவுங்
கனசக் கானமணிக் கச்சு—நனிசிறப்ப

௧௫0. மேலைத் தியாக வினோதப் பேயர்வரைந்த
சேலைத் திருவரையுஞ் சீராவுஞ்—சூலத்தான்

௧௫௧. பாதத்தோ டாடும் பசும்பொற் பரிபுரமுங்
கீதத்தோ டாடரவக் கிண்கிணியு—மாதிரத்தை

௧௫௨. வவ்விய கோடி வயங்குமிள ஞாயிற்றுச்
செவ்வியுந் தோற்குந் திருவழகு—நவ்வியங்

௧௫௩. கண்ணார நோக்கிக் கசிந்து வியந்துவந்து
பண்ணாரப் பல்காற் பணிந்தேத்தி—மண்ணாட்டு

௧௫௪. வைவச் சுதகற்பம் வந்து முசு குந்தமன்னன்
செய்விப்பக் கொண்டதிருத் தேர்பாரீர்—கவ்வைப்

௧௫௫. புடைவீரை யாடைப் புவனாதி காக்கும்
படைவீர கண்டையத்தைப் பாரீர்—மடவீர்கா

௧௫௬. ணீடிய வம்பலத்தே நின்றாடி யிங்குமிருந்
தாடிய பொற்சே வடிபாரீ—ரூடெறிக்குஞ்

௧௫௭. செவ்வந்தி மாலை நிலாவாந் திருமார்பிற்
செவ்வந்தி மாலை தெரிசியீ—ரவ்விருவர்

௧௫௮. பாட்டுக் கடலமுதின் பாற்பிறந்த திங்களெனுந்
தோட்டுச் செவந்தித் துணைகாணீ—ரோட்டிய

௧௫௯. தேரழகோ வீதித் திருவழகோ வாரூரர்
பேரழகோ யாது பெரிதென்பார்—தேரழகுந்

௧௬0. தோற்றழகு நிற்கத் தொழுதேத்தப் பெற்றநம்
பேற்றழகு தானே பெரிதென்பார்—கோற்றொடியீ

௧௬௧. ரெண்படைக்குங் கங்கைபோ லீரா யிரநாமுங்
கண்படைக்கி னன்றோ களிப்பென்பார்—பெண்புடையா

(பா-ம்) ௧௪௮. 'செவ் வந்திமணித் தாருங்' ௧௫௯. 'வீதித் தெருவழகோ'
௧௫௨. 'நாயிற்றுச்' ௧௬௧. 'பண்புடையார்'
௧௫௭. 'மாலை நிவந்த திரு'

கசுஉ. ரொள்விழா நோக்கி யுவக்குங் குழாத்தினு
லெள்விழா வீதி யிடத்தென்பா—ருள்ளரக்காப்

கசுஙு. பையப் புகுந்தருக்கும் பண்பாற் றியாகர்க்கு
மெய்யைத் தழலென்கை மெய்யென்பார்—செய்யதீ

கசுச. வண்ணம் பெறுமிறைவர் வந்தணையி னம்முடைய
கண்ணம் பொழியாதோ காய்ந்தென்பார்—மண்ணெகிழக்

கசுரு. கண்ணீர் சொரிவிப்பீர் கால்புதையுந் தேர்க்கென்ப
தெண்ணீ ருமதுமதி யேதென்பார்—புண்ணியர்தஞ்

கசுசு. செம்பொன் றியாகஞ் சிறப்பித்தார் சேவித்தார்க்
கம்பொன் குடத்தோ டளித்தென்பார் கொம்பனையீர்

கசுஎ. தென்னாட் டமணைச் சிதைத்தார்நங் கூறைபறித்
திந்நாட் டமண்வளர்த்தா ரின்றென்பார்—முன்னாளே

கசுஅ. யக்கன்று போக்குதிரு வாரூர்த் தெருவென்று
திக்கன்று போக்கவந்தோம் யாமென்பார்—தக்கபசு

கசுகூ. வன்றிழந்த கன்றுக் கசைத்த மணியரிதோ
வின்றிழந்த கன்றுக் கெமக்கென்பார்—சென்றெதிரே

கஎ0. யான்றதொரு புற்றி னகத்தே மறையரவங்
கான்றதொரு மாணிக்கக் கட்டியே—வான்றிரையின்

கஎக. வாங்கும் பலபூ மலரல்லி யங்கோதை
தாங்கு மணநுகர்ந்த தண்ணளியே—யோங்கிய

கஎஉ. மன்றற் றிருச்சா லகத்து வழிநுழைந்து
தென்றற் றவழுஞ் செழுங்காவே—முன்றிற்

கஎஙு. கடைகொளுங்கொள் ளாதென்னக் காத்திருந்து தேவர்
விடைகொளுஞ்சிங் காதனத்து வேந்தே—யடியொன்றுக்

கஎச. குய்யும் படிபசும்பொ னோரா யிரமுகந்து
பெய்யுந் தியாகப் பெருமாளே—வைகுமது

கஎரு. மாலா னவர்தனுநாண் மாற்றியவூ ரென்பதோ
மாலா னவர்தனுநாண் மாற்றினீர்—மாலேத்த

கஎசு. வோதம் புகுநா ளுமையுடன்புக் கீர்பிரிந்தா
லேதம் படாரீரு மென்படஉர்—வேதிய

கஎஎ. ஞேமத்தீக் கம்பர்வா யுற்றதென வெவ்வினையேங்
காமத்தீ வந்துதிருக் கண்சாத்தீர்—தோமிலாத்

(பா-ம்) கசுச. 'வண்ணம் பெறினிறைவர் வந்தடையு நம்' கஎக. 'தாங்கி மண' கஎச. 'ஓரா யிரமுவந்து' கஎரு. 'என்பதுவோ' கஎசு. 'என்செயீர்' கஎஎ. 'அம்பல்வா யுற்ற தெனவினையேங்'

கஎஅ. தம்மை யறிவோர் தனிஞான மோபவனி
யெம்மை யறிவோ டிழக்கின்றே—மும்மைக்
கஎகூ. கமலா லயத்தரெனுங் காரணமெம் முள்ளக்
கமலா லயம்புகவுங் கண்டோந்—தமியே
கஅ0. முளத்து மயன்மொழிய வோர்மொழியு மாறுக்
கிளத்த றிருவாயிற் கேளோ—மளித்துலகம்
கஅக. வாழும் பரிசுதிரு வாய்க்கேள்வி செய்தகதை
தாழுஞ் சிலர்க்குத் தவிர்ந்தீரோ—வாழி
கஅஉ. விடம்போல் விழியார்க்கு மேவத்தந் தாலோ
விடம்போல் வலப்புறமு மென்பா—நடம்பெல்லாம்
கஅங. போர்ந்தணிந்த வெண்பளிதப் போர்வையைப் பார்வையாற்
சார்ந்தணிந்த தென்னத் தயக்குவார்—நாந்தரும
கஅச. ஞாலையைக் கண்டிறவா தயிர்த்தோன் செவ்வந்தி
மாலையைக் கண்டு மதிகாணார்—நூலை
கஅரு. விளக்கமல னந்திநிற மேவவே றாகி
யுளக்கமலஞ் சால வுலப்பார்—களக்காமன்
கஅசு. வாதிப்பார் தத்த மனமு மிணையதிறம்
பேதிப்பா ராகப் பிறிதொருத்தி—யாதிப்

பேதை.

கஅஎ பருவச் சிறுபேதை பல்கலையு நட்பு
மருவப் படாத மடமா—னுருவ
கஅஅ. மிகத்தா ரணியில் விளங்கு மிளேனு
ரகத்தா மரைவிரவா வன்னம்—பகைப்போர்
கஅகூ. பெறுதேர் விடுமுன் பிறந்தணிய நாள்வேள்
சிறுதேர் விடுகுழவித் தென்றன்—மறமே
கசு0. மடியாத தக்கன் மகம்போலக் கூட்டி
முடியாத கூந்தன் முடியாள்—படியொடுக்குங்
கசுக. காலை விளையு மளவுங் கரைபுரளா
வேலை யனைய விழியினாள்—ஞாலத்துத்
கசுஉ. தீராப் பயமென்று நாணென்றுஞ் செங்கனிவாய்ச்
சோராப் பசுங்குதலைச் சொல்லினா—டேறுர்ந்த
கசுங. சேயுமொரு செங்காட்டிற் சேயுங் காரவுண்ட
சேயுமெனப் போய்மீளுஞ் சிற்றெயிற்றுள்—சேயுமுடனை
கசுச. கூடுந் துணையு மமணைக் குலச்சிறையா
ராடும் பகையடக்கு மாறென்னக்—கூடி

(பா-ம்) கஅக. 'செய்கதையைத்' கசுங. 'மீண்ட சிறெயிற்றுள்'
கஅங. 'தயங்குவார்' கசுச. 'ஆடும் படி'

ககரு. யிளையோரைக் கண்ணுமடு மென்பளவுந் தாமு
முளையா தடங்கு முலையா—ளளியோர்

ககசா. திருத்திய வுள்ளத் திறம்போற் பிறரை
வருத்தி யறியா வடிவா—டருக்கிலாள்

ககஎ. விண்ணா டியமதியை வேட்டழுவாள் சேடியர்கள்
கண்ணாடி காட்டுழிக் கண்டொழிவா—ணண்ணாத

ககஅ. வாடி நிழல்பிடிப்ப வப்புறத்தோ வென்றுமறித்
தோடிய தந்தோ வொளித்தென்பா—ளாடக

ககக. வள்ளக் கெடுதியின் மாதர் முலையதென்று
மெள்ளக் கலையை விடுத்தலைப்பா—ணள்ளாயஞ்

உ00. சென்று மரப்பாவைக் கின்னஞ் செவிவளரு
மென்று குதம்பை யிடப்போவா—ளொன்றுமிப்

உ0க. பூவை கிளிபோற் புகலாது மூங்கையோ
பாவை யிதுவெனலும் பாவைமார்—காவலன்

உ0உ. மூங்கைபோந் தீர்த்த முழுகுளியுன் பாவைக்கு
மூங்கைபோ மென்று முறுவலிப்ப—வாங்கதற்குப்

உ0ங. போமா றெழுங்காற் புவியாதி நாதாந்த
மாமா றிடங்கொண் டமர்ந்தாலும்—யாமத்தே

உ0ச. தில்லையா ரூருந் திருவந்திக் காப்புக்கே
தொல்லையா ரூருந் தொழநின்றே—னெல்லை

உ0ரு. பரந்த வகிலம் பலகோடி கோடி
புரந்தசமற் கார புரத்தோ—னரந்தைப்

உ0சா. பிறப்பா லடையாத பேரின்பந் தன்னூர்ப்
பிறப்பா லடைவிக்கும் பெம்மான்—பிறப்பன

உ0எ. முற்று நிமலமே மூதூர்க் கிலைபுலையென்
றற்றுநமி நந்தியார்க் கோதினேன்—பொற்றாளுக்

உ0அ. கன்போதுந் தேவ ரணிகக் கடற்பவனி
முன்போதும் பேரி முழங்குதலு—மின்போல

உ0க. மொய்த்தாய முன்செல்லச் சென்றாண் முலைத்தாயர்
கைத்தாயர் கைம்முகிழ்ப்பக் கைம்முகிழ்த்தாள்—சித்தந்

உகO. கருதியது விட்டாள் கனகத்யா கேசன்
பருதி வெருவுருவம் பார்த்தா—ளருகுபோய்

(பா-ம்) ககஎ. 'காட்டுழியிற்' உ0ரு. 'அகில பலகோடி'
ககஅ. 'என்றுமதித்' உ0அ. 'அணிகக் கடன்முழக்கு'
ககக. 'றதென்று' ,, 'அணிகக் கடன்முழங்க'

உகக. வேதச் சிரத்திருந்து விண்டுவுங் கண்டறியாப்
பாதத் தழகெனவும் பாராதே—மாதவர்க்குந்

உகஉ. தேவர்க்கு மாட்டைக் கிருதினஞ் சேவிப்போர்
யாவர்க்கு நாட்டமதி லென்னாதே—பூவைமீர்

உகங. பந்தித்த வாடாவக் கிண்கிணியென் பாவைக்காம்
வந்தித்து வாங்க வருகென்றாள்—சிந்தையா

உகச. லெண்ணவரும் வேட்கையோ வெண்ணிறந்த நான்முகரும்
விண்ணவருந் தேர்ந்து விதிப்பதோ—மண்ணளந்தோ

உகரு. னேதப் பிறவிதொறு மீன்றோ ரலங்கரிக்குங்
கீதச் சிறுமருங்குற் கிண்கிணியோ—நாதாந்த

உகசா. மானார்க்கு நாதமொரு கிண்கிணியா யாடுதொறுந்
தானார்க்க வந்த தகைமைகாண்—டேனேகே

உகஎ. ளாடாவ மீச னசைந்தா டலைநோக்கும்
பாடாவ வேதப் பதஞ்சலிகா—ணீடிரண்டு

உகஅ. நீங்கா தணிவதுகா ணின்பாவை யிப்பாம்புக்
கேங்கா தழாதே யிராதுகாண்—வாங்கினு

உகசு. மன்ன மனையாயிவ் வாட்டறிவார் வேண்டாவோ
வின்ன மரிபா யிழக்குமோ—தன்னுணராப்

உஉ0. பேதா யெவர்க்கும் பெறற்கரும்பே றென்னாதே
யோதா யிதுவு முரைத்துமோ—போதாயென்

உஉக. றுய்முதலோ ராற்றுதலு மாறூ ரூழியான்
சேய்முதலோ ரோடுந் தெருக்கடந்தான்—றாய

பெதும்பை.

உஉஉ. பெதும்பை பிறிதொருத்தி பெட்குமதென் றாலும்
பொதும்பை விடநடவாப் பூந்தே—னெதிர்ந்து

உஉங. குழைக்கு முவகைக் குணம்புணர்ந்த தேனு
மழைக்கு நடம்புரியா மஞ்ஞை—கழைக்காமன்

உஉச. மேவ விளவேனில் வேட்பறிந்த தானாலுங்
கூவ வறியாக் குயிற்பேடை—யாவருந்

உஉரு. தோற்றமு ஞேடமி ஞேடமின் றேற்றினாற்
கூற்றமி தென்று குலத்தாயர்—நாற்றிசைக்கு

(பா-ம்) உகக. 'கண் கண்டறியாப்' உஉச. 'மேவ விள'
உகசு. 'கா—ணுதை' ,, 'வேட்ப தறிந்தாலுங்'
உஉஉ. 'பொதும்பர் விட' ,, 'கூவ லறியாக்'
உஉங. 'குணம்புரிந்த தேனு' உஉரு 'கூற்றாகு மென்று'

௨௨௬. மேற்கின்ற வெம்பறை யிட்டதிர வந்தெட்டிப்
பார்க்கின்ற தனைய பணைமுலையாண்—மேற்கொன்ற

௨௨௭. வேளைவா வென்றேன் விடைபோலக் கொல்கைக்கு
நாளைவா வென்னு நயனத்தா—ணீளமரர்

௨௨௮. தேடுங் கமலையெனச் செங்கமலை மாலையே
கூடும் படிகூட்டுங் கொண்டையா—ளாடும்

௨௨௯. வினைபுகுந்து வேகடஞ் செய்யாதாய் மீண்டு
மனைபுகுந்து செய்ம்மணியாய் வாய்ப்பா—டணிபுகுந்து

௨௩௦. தன்மண வேட்கை சிறிதுள்ளித் தன்கிளியின்
மென்மண நோக்கி மிகநகைப்பா—டன்னருகு

௨௩௧. பாவைவிளை யாடிப் பணிக்கொல்லி யொத்தமைபோய்ப்
பூவைவிளை யாடிப் பொழிலொத்தாள் - பாவையருந்

௨௩௨. தானு மலர்க்காத் தலைப்பட் டுலாவுதலு
மானு மயிலும்போல் வந்தொருத்தி—தேனனையா

௨௩௩. யாதி யவனி புவனிதிரு நீலநகர்
வீதி யழக விடங்கென்னுஞ்—சோதிதிருப்

௨௩௪. பேரேழு மிட்டுப் பெறுமகவாய் நீவளர்த்த
வோரேழு செவ்வந்திக் குள்ளோங்கி— யாரூர

௨௩௫. ஞமத்த தொன்று மலர்ந்ததென நண்ணியதைத்
தாமத்த தோளாற் றழீஇக்கொண்டு—தேமலரைக்

௨௩௬. கொய்து தொடலை குறுந்தொடிக் கைசிவப்பச்
செய்து மிலைந்து செவிலியரை—யெய்தித்

௨௩௭. திருப்பே ரவனதே யீது தியா கேசன்
விருப்பே கொடுத்துமென வேட்ப—வுரித்தெனினுஞ்

௨௩௮. சூடியபி னுதாந்தச் சோதித் திருவுருவா
யாடியவன் வேணிக் கடுக்குமோ—சூடிய

௨௩௯. கட்டார் கமழ்போது கண்ணுக்குக் கண்ணையிடந்
திட்டார்க் கொழிய விடப்போமோ—மூட்டாது

௨௪௦. கண்மலருஞ் சாத்தக் கருத்தொருமித் தார்க்கலது
தண்மலருஞ் சாத்தத் தகுங்கொலோ—பெண்மயிலே

(பா-ம்) ௨௨௬. 'ஏர்க்கின்ற வெம்பறை யிட்டதிரா தென்றெட்டிப்'
,, 'சேர்க்கவெரி'
௨௨௯. 'மீட்டும்'
,, 'செம்மணியாய்'
௨௩௦. 'தன்மன வேட்கை'
,, 'மென்மன நோக்கி'
,, 'தன்மருகு'
௨௩௪. 'பெருமகவாய்'
௨௩௮. 'மோனாடியே'
௨௪௦. 'தண்மலரைச்'

உசக. கங்கை பிறர்கொணர்ந் திட்ட கடிமலரைச்
செங்கை யலைத்தெறிந்த சீருளோ — பங்குடையா

உசஉ. டன்மாலை யிட்டுத் தழுவுந் திருக்கழுத்தி
லுன்மாலை யிட்டக்கா லூடாளோ — புன்மையிது

உசங. புந்தியுஞ் சிந்தியே லென்றவர் போற்றுதலு
மந்தியுஞ் சந்தியு மாடுவான் — வந்துதிரு

உசச. வாரூர்ப் பிறந்தாரெல் லார்க்கு மடியேனென்
றாரூரர் சொன்னதிரு வாரூரன் — சோரா

உசரு. வருணையத் தொண்ட ரனைவருந்தா னென்னுங்
கருணையைப் பார்முழுதுங் காணத் — திருவடிக்கீழ்

உசசு. மன்னுங் கருணா கரத்தொண்டை மான்வந்தா
னென்னுந் திருச்சின்னத் தெம்பிரான் — மின்னுகாத்

உசஎ. துங்கத் திகிரி சுடர்த்திகிரி வெற்பளவும்
பொங்கத் திருத்தேரிற் போதுதலு — மங்கெழுந்து

உசஅ. போந்தளவி லாய மகளிர் பொதுளப்போய்க்
காந்தளஞ் செவ்விக் கரமுகிழ்த்தா — ளேந்திழையுந்

உசகூ. தக்க தகாத வறியாத் தரத்தறிவோ
வொக்க வுடையமையு மூடலோ — மிக்கோன்

உருo விருப்பத் தரியணையின் மேலுமையைப் போல
விருப்பத் தருங்கொலெனக் கென்று — டிருத்தாய

உருக. ரெவ்வகைத் தேவர்க்கு மித்தேவே வேந்தென்னு
மவ்வகைக் கிட்டவடை யாளங்காண் — கைவணங்கிப்

உருஉ. பாரமாம் போதனையும் பாப்பணையும் பண்டளந்த
வாரமா ணிக்கத் தமைந்ததுகா — ணாரணனு

உருங. மத்தகைய சிங்கத்துக் கீச னடிசுமப்ப
தித்தகைய சிங்கம்போ லெய்துமோ — நித்தனுக்

உருச. கொள்ளியசிங் காதனம் பொன்னெனலு மொண்கயிலை
வெள்ளி யெனலுமலால் வேறுண்டோ — கொள்பவுரி

உருரு. வல்லான் மவுலி மதியத்தும் வாமத்து
மெல்லா வனமறியு மேறுமோ — வல்லாய

(பா-ம்) உசஉ. 'உன்மாலையுமிட்டால்' உசகூ. 'தக்க தகாத வழியறி யாத்தகவோ'
உசங. 'சந்தியமஞ் சாடுவான்'
உசரு. 'அருணைத் தொண்டர்' உருஉ. 'பண்டளித்த'
உசசு. 'மின்னிகாத்' ,, 'அமைத்தது'
உசஅ. 'போந்தள வில்லா' உருங. 'சுமப்ப, வித்தகைய'

உருசு. கற்றைக் குழற்கவரி கைக்கே யுலகத்து
மற்றைக் கிளியும்போய் வைகுமோ—நற்றவ

உருஎ. மேற்புரியா தாருக்கு வீதிவிடங் கப்பெருமான்
பாற்பிரி யாமை பலிக்குமோ—வேற்குமிடங்

உருஅ. கொள்ளை விடத்தைக் கொழுநர்க் கமுதாக்குங்
கிள்ளை மொழிக்கொழியக் கிட்டுமே—வொள்ளிழாய்

உருகூ. சேய்மையி னின்று பணிநீங்குந் தீங்கெனனும்
வாய்மையி னின்ற மடமயிலுந்—தாமணுக

உசுO. நல்கா விடத்தார்க்குத் தம்மிடமு நல்காரின்
மல்காது வைக்கு மனமீட்டாள்—வில்வாயிற்

உசுக. பூவா விட்ட தொடைமடக்கிப் போர்மதனுந்
தேவா கண்டன் செலச்சென்று—ஞேவிய

மங்கை.

உசுஉ. மொத்த வுருவத் தொருத்தி யுலகருத்தி
வைத்த கடவுண் மடமங்கை—மெய்த்தவத்தி

உசுங. னெய்துந் திருவிஞர் காணிக் கெனப்பிறிது
செய்து வளர்த்த திருப்பாவை—பொய்கையின்

உசுச. மீதெடுத்த பொனமாற்று வேழ முகனறியும்
போதெடுத்த வாணிப் புதுக்கனகம்—பேதைமுதன்

உசுரு. மூசு மளக விருளை முகமதியந்
தேசு வாவாச் சீறுதலுங்—கூசிப்போ

உசுசு. யுச்சியி னின்றது பின்னும்பின் ஞேடியென
முச்சி விடுத்த முடிக்குழலா—ணச்சுதய

உசுஎ. மின்று மெதிர்ந்த தெனமா லயன்கோயி
னின்று நடுங்கு நெடுங்கணு—ளின்றளவே

உசுஅ. தானபுதிது கற்ற சகோடயாழ்க் கல்வியெனத்
தேன்புதிது கற்ற செழுமொழியா—ளீன்புதிய

உசுகூ. தாலக்காச் சேய்க்குத் தரும்பைங் குரும்பையுங்
கோலக்காத் தாளமுமாங் கொங்கையாண்—மாலைக்கும்

உஎO. பூட்டக் கொடுவந்த பூணுக்குஞ் சேடியர்க்குஞ்
சூட்டப் பழிபைத் தொடங்கிடையாள்—கோட்டு

(பா-ம்) உருஎ. 'மோ - சீர்ப்பீடங்' உசுசு. 'விடுத்து முடிகுழலாள்'
உருகூ. 'பணியலுந் தீங்கு' உசுஎ. 'இன்று முதித்தது'
உசுங. 'செய்து வகுதத'

உஎச. முலைவரவு நெஞ்ச முளரியிரண் டொத்த
கலைவரவு முற்றுங்கை கண்டா—ளுலக

உஎஉ. மிகவிறக்கு மின்றொடிவண் மென்முலைகண் டென்றான்
முகமிறக்கி மூரன் முகிழ்ப்பாண்—மிகமதனூன்

உஎந. மூன்மொழி வார்க்கு மொழிவன்றித் தானேமுன்
பன்மொழி செய்யாப் பருவத்தாண்—மென்மலர்த்

உஎச. தண்டலை வீதித் தலைத்தலை நாட்செய்த
வண்டலை விட்டு மணைவிடா—டண்டாச்

உஎரு. செழுந்துணைவி பாகர் தியாகேசர் தேரிற்
கெழுந்துணையு மாடுது மென்று—கொழுந்துழாய்த்

உஎசு. தொங்கலை வேய்ந்தார் தொழநின்ற பாற்கடலிற்
பொங்கலை யூடாடும் பொன்போன் றுஞ்—செங்கம்பிக்

உஎஎ. காதழகர் சென்னி மதியாடக் கன்னிமான்
மீதழகி னோடாடு மெய்போன்று—மாதுமையாள்

உஎஅ. பாகத்தி னும்போ யசைந்தாடி பாற்பளித
வாகத்தி னூடு மதுபோன்றுந்—தோகையு

உஎகூ. மாடினு ணித்திலப்பே ரூசலா ரூரரைப்
பாடினு டேனொழுகப் பல்காலு—மாடத்

உஅ0. துடனின்ற மாத ருருகி யகில
மடனின்ற கொங்கை யணங்கே—புடைநின்ற

உஅக. பௌவ முளரிமலர்த் தெய்வமும் பான்மலர்த்
தெய்வமும் வாழ்த்தெடுக்குந் தெய்வமே—யிவ்வகையே

உஅஉ. தூய்முத்தே யூசலா நீவிரும்பிற் சோதியாம்
வேய்முத்தே சேர விரும்பாதோ—தூய்முத்தே

உஅந. வேறு முதவ மதன்கரும்பை மேவியா
மீறு படுத்திலே மென்னுதோ—மாறழிய

உஅச. வன்று கருமா வெயிறுகடிந் தட்டமையி
னின்று கடியநெடி தெண்ணுதோ—கன்றியே

உஅரு. முன்னு ளுரித்த மதகரியை மொய்ம்பினு
லிந்நா ளுரிப்ப விரங்காதோ—நன்னிலவை

(பா-ம்) உஎச. 'தண்டார்ச்'
உஎரு. 'துணைவர் த்யாகேசர் தேரிற் பவனிக்கு'
உஎசு. 'தொழநின்று பாற்கடலப், பொங்கலை யோடு'
,, 'பாற்கடற்'
உஅ0. 'இடநின்ற மாத ரெவரு முலகம்'
உஅரு. 'கரும்பை வெம்மதத்தான், மீறுகதக் கல்லானை மெல்லாதோ'
,, 'மேலியாம்'

உஅசு. யப்போது தேய்த்த வரிக்கரிய தாமரையி
னிப்போது தேய்ப்ப வெதிராதோ—தப்பாத

உஅஎ. வைந்தா யுதத்தை யளித்தமைபோய் நாலளித்து
நந்தா யுதம்பறித்து நல்காதோ—மைந்தர்கட்

உஅஅ. முள்ளூச லாட்டுவதும் போதாமே யொண்முத்தின்
வெள்ளூச லாட்டுவதும் வேண்டுமோ—கிள்ளாய்

உஅகூ. பனிப்போதின் வாட்டம் படும்படுமுன் மேனி
யினிப்போதும் போது மெனலு—நினைப்பி

உகூ0. னருமைப் பெருமான்றென் னாரூர்ப் பெருமான்
பெருமைத் தியாகப் பெருமா—னொருதெருவிற்

உகூக. சேவிக்கு மெல்லைச் சிவலோகத் தெல்லைக்க
ணேவிப் பணிப்ப னெனவந்தான்—பாவை

உகூஉ. யிழையூச லாடா திருபொன் மகரக்
குழையூச லாடக் குதித்தா—டழைகாவின்

உகூங. சேக்கையிற் றோன்றிச் சிறைநிறைந்த வோதிம
மாக்கயத் தேகாது வைகுமோ—காக்குந்தாய்

உகூச. காப்புப் பிரிந்த சகோரங் கலைமதியப்
பூப்புக் கெதிராது போதுமோ—தேர்ப்பவனி

உகூரு. சேர்ந்த குலரத்ந சிங்கா தனப்பெருமாள்
போந்த திருமறுகு போய்ப்பணிந்தாண்—மாந்தளிர்

உகூசு. வண்ணந் திரிந்து மனந்திரிந்து வீழ்தலுமுக்
கண்ணன் றிருத்தேர் கடாவினு—னொண்ணுதலை

உகூஎ. யிற்கொண்டு புக்கா ரிடுமலர்ப் பாய்ப்படுத்தார்
சொறகொண்டு தெள்ள முதைச் சோர்வித்தார்—பொற்கொடி

உகூஅ. வேணுமுத் தொன்றுமே மெய்த்தழலா மல்லதுநாம் [யும்
பூணுமுத் துந்தழலாய்ப் பொங்குமோ—வாணகமே

உகூகூ. பேர்த்த நிசாசர னல்லாதிப் பெண்சிறையைச்
சேர்த்த நிசாசரனுஞ் செய்யுமோ—கூர்த்திறைவ

ங00. ராடு மிராவே யுயிரொடுக்கு மன்றிவெயிற்
கோடு மிராவு மொடுக்குமோ—வாடலரண்

ங0க. பூசையிற் கூடு மணிதவிரப் போந்தாவி
னோசை மணியுமுயி ருண்ணுமோ—வீசர்க்குப்

(பா-ம்) உஅசு. 'தேய்ப்ப விரங்காதோ' உகூகூ. 'செய்வனோ'
உஅஎ. 'போ னலளித்து' ,, 'கூத்திறைவர்'
,, 'நந்தாயது' ங0க 'பூசைத்ரி கூட மணி'
உகூச. 'கலாமதியப்'

௩0௨. பாற்கடல் வாயொழியப் பாவி செவிதீயக்
கார்க்கடல் வாயாலங் காலுமோ—மேற்கிடும்பூ

௩0௩. ணுண்டுமிழுங் காற்றுவிடுத் தோங்கற் றமிழமுத
விண்டுமிழுங் காற்றும் விடமாமோ—பண்டறியே

௩0௪. னின்று விளைந்த விலையென் றிளைத்திளைத்துக்
கனன்று மடநாணுங் கைந்நெகிழ்ந்தாள்—சென்ற

மடந்தை.

௩0௫. தெருவத் தொருத்தி திருமடந்தை மங்கைப்
பருவத் தடுத்த படிபோய்—வரவரக்

௩0௬. காஞ்சிச் சுருக்கமுங் கச்சிற் பெருக்கமுமாம்
பூஞ்சித் திரமருங்காள் பூண்முலையாள்—வாஞ்சித்துக்

௩0௭. கற்பன கேட்பன வக்கால மிக்கால
நிற்பன செய்த நிலைமையாண்—முற்பருவம்

௩0௮. பூணுங் கலவி புலவிபோ தாமைக்கு
நாணுங் கருத்தி னகைமுகையாள்—சேணுய

௩0௯. ரங்கையார் மாடத்தி னந்தி நிலாமுன்றின்
மங்கையர் பால்வைக வைகுதலு—மங்கொரு

௩௧0. வீழி யிதழ்விறலி மின்னனை யாய்வாழி
வாழி யெனக்கைம் மலர்கூப்பி—யாழியான்

௩௧௧. வில்லான துன்புருவ விற்பொருது நாணற்ற
தல்லாது தேவ ரறுத்ததோ—நல்லாய்

௩௧௨. வளரு மொருமூ வகைப்புட் கரிணி
முளரி நறும்போது மூன்று—முளமருண்டு

௩௧௩. மென்முகங் கீழ்மருங்கு மேனைக் குவதலது
நின்முக நோக்கியு நேருமோ—முன்னெழுவர்

௩௧௪. சீத வனசக் கிழங்ககழ்ந்தார் தெவ்வெனநின்
பாத மிருகை பணித்தன்றே—நாதன்போய்ப்

௩௧௫. புற்றிடங் கொண்டமையும் பாதாளப் பொற்புவனத்
துற்றிடங் கொண்டமையு மோதுகோ—மற்றுன்

௩௧௬. பணிக்குப் பணிமணி பல்காலும் வாங்கிப்
பணிக்கப் புகுந்த படிகாண்—டணிப்பரிய

(பா-ம்) ௩0௮. 'முகையாண்-மாணிக்கத்து' ௩௧௩. 'முன்னெழுவார்'

௩௧௭. சிந்தை யுனதழகிற் சென்றசையா வாசிகா
ணெந்தை யசலநிழ லெய்தினு—னந்தலத்துக்

௩௧௮. காதை யினூழனது காரணமே போதுமெனக்
கோதை யகமுருகக் கூறினுள்—காதலியுந்

௩௧௯. தண்ணிய வாறணிந்தார் தாமே தமியேனை
யெண்ணிய வாறணைவ தென்றென்றாள்—பண்மகளும்

௩௨௦. வார்தரு பூங்குழலாள் வாம ரினிநாளை
யூர்தரு தேர்ப்பவனி யுண்டென்றாள்—வார்சடையார்

௩௨௧. நன்று தரவருமுன் னுமை மலயக்கா
லின்று பொடிபடுத்தி னென்செய்கேன்—றென்றலே

௩௨௨. வெங்கண் கொடுசுடினு மேனுட் படியின்ன
மங்கம்பெண் ணுக்க லருமையோ—பங்கயக்கண்

௩௨௩. மாட்டுப் பரிவலவர் வந்தா லிளமதியக்
கோட்டுத தழலுங் குளிருமோ—கேட்டிலையோ

௩௨௪. வப்ப ருறைநீற் றறையவித்தார்க் கிப்பிறையின்
வெப்பமுந் தட்பம் விளையாதோ—வொப்பிலாச்

௩௨௫. செம்பொன்றியா கேசர் சிறியேன் முலைத்தலையிற்
பைம்பொன் மறித்தும் பறிப்பரோ—நம்பியா

௩௨௬. ரூரற் கருளி யுடன்பறித்தா ருன்னிறத்துப்
பாரப் பசும்பொன் பறியாரோ—காரொத்த

௩௨௭. மாகு வளைமிடற்றார் வல்வினையேன் கையைவிடுத்
தேகு வளைமீண் டிடுவரோ—மாகூடற்

௩௨௮. செட்டு மகளிர் கிரளுக் களித்தாரூன்
மட்டும் வளையளிக்க மாட்டாரோ—விட்டெறிக்குங்

௩௨௯. கோவத்தின் மேனிக் குழகர் வரின்மார
ணுவத்தி னம்பு மறுங்கொலோ—கோவிசயன்

௩௩௦. வேண்டும் பகழி விளைவொழித்தார் வேடணி
யீண்டு மலருக் கெளியரோ—காண்டி

௩௩௧. யினிக்காலை யென்றென் றிருவாரூமிவ் வாறு
பணிக்காலை முட்டப் பகர்ந்தார்—தனிக்காலை

௩௩௨. யோட்டுந்தேர் சண்டா ளுலாத்தேருக் காண்பலெனப்
பூட்டும்பூ ணேடும் புறப்பட்டாள்—கேட்டன

(பா—ம்) ௩௧௮. 'அகமுருகிக்' ௩௨௬. 'நேரொத்த'
௩௧௯. 'தண்ணில வாறு' ௩௨௭. 'வாரு மணிமிடற்றார்'
௩௨௦. 'உள்ளென்றாள்' ௩௨௮. 'செட்டி மகளிர்'
௩௨௫. 'மறித்துப்'

௩௩௩. ளத்த னசைவை நடத்துக்கே யாஞ்சுத்த
மத்தளமு மாசிலாத் தாளமு—மொத்ததிருச்

௩௩௪. சின்னமுங் காகளமுந் தேவாரப் பண்ணிசையி
னன்னயமும் வேத நவின்முழக்கு—முன்னதிரக்

௩௩௫. கொட்டிய துந்துபியு மான்முடியைக் கோதண்டம்
வெட்டிய நாளெடுத்த வெண்சங்கு—மெட்டெண்ணு

௩௩௬. மாசை யுடனாடு மாடரவக் கிண்கிணியு
மோசை புகத்தன் னுயிர்புக்கா ளாசெடுத்துப்

௩௩௭. பொன்மாரி பாடினி மேற்பொழிந்தாள் போதிறைற்
பன்மாரி காமாரி பாற்பொழிந்தாண்—முன்வீழ்ந்

௩௩௮. தமலா சிவலோகா வாரூர்த் தியாகா
கமலா லயவல்லி காந்தா—வெமையாளுஞ்

௩௩௯. செவ்வந்தித் தாமா திருவந்திக் காப்பழகா
வெவ்வந்திப் பூசல் விலக்கென்று—ளவ்வந்தி

௩௪௦. வண்ணத்தா னிவ்வண்ண மாதைமுனி யேலென்று
வெண்ணத்தான் சேய்க்கு விழிவைத்தான்—பெண்ணணங்

௩௪௧. வைத்த விழியுடனே மீண்டாண் மழுவலனு [கும்
மூய்த்த திருத்தே ருடன்போந்தா—னத்தெருவி

அரிவை.

௩௪௨. லுற்ற வரிவை யொருத்தி தனதுநிழல்
பற்ற வுருகும் படிமத்தாள்—செற்றெழுப்புங்

௩௪௩. காலை மதனைக் கனலாற் றிளநீரு
மாலை முடிசூட்டு மாமுடியும்—போல

௩௪௪. நிரம்பித் தலைகுவிந்து நேரொத் தடியிற்
பரம்பிப் பணையப் பணைத்துப்—பெரும்புவனத்

௩௪௫. தார்வம் பிறக்குமன்ப ராபத் தொளித்ததென
வார்வம் பிறக்கும் வனமுலையா—ளோர்பொழுதுந்

௩௪௬. தங்கோர் குறையாத தன்னிறைவாற் பானுபதப்
பங்கே ருகமாம் பருவத்தாண்—மங்கைமுத

௩௪௭. லைந்தி னடிப்பொலிவா யாரூரன் செய்கருமு
மைந்தி னடிப்போ லடைவிற்பா—னைந்தா

(பா-ம்) ௩௩௫. 'வெட்டிய வன்றெடுத்த' ௩௪௫. 'மார்வம்'
௩௪௦. 'மானைமுனி யேல்' ,, 'மார்பம்'
௩௪௫. 'ஒழித்ததென' ௩௪௭. 'பொலியு'

௩௪௮. துறைகோலக் கூடலுக்கு மூடலுக்குந் தூக்கு
நிறைகோலை யொத்தொழுகு நெஞ்சாள்—விறலியரு

௩௪௯. மெல்லையில் பாணரு மேத்த விருந்திரா
வொல்லையில் வீணையிடத் தொன்றேந்தித்—தொல்லநளாங்

௩௫0. காவிரியுங் காவிரி நாடுங் கழுநீரு
மாவுறையா ரூரு மணிவரையுந்—தாவுபரி

௩௫௧. வேதமு மீரா யிரமருப்பு வேழமு
நாதமாம் பஞ்சா னனமுரசு—மூதுலகங்

௩௫௨. காக்கின்ற வாள்வீர கண்டயமு ஞாலமுழு
தாக்கும் புகழ்த்தியா கக்கொடியும்—பாக்கொண்டு

௩௫௩. பண்ணமரு மூவாறிற் பாடுதலும் பாடினியோ
ரெண்ணரிய பாண ரியம்புவா—ருண்ணெகிழ்ந்து

௩௫௪. கேட்டோர்த்யா கேசரே கேட்பருளைக் காப்பர்காண்
மாட்டோர் புகழ்ந்தென் மகிழ்ந்தென்றார்—கேட்டவரு

௩௫௫. மென்னுயிர் காப்பரே யென்று விறந்தமதன்
றன்னுயிர் மீட்டுந் தருவரோ—முன்னெடியோன்

௩௫௬. பெய்போதி லொன்று குறைத்தார் பெறுஞ்சிறுவன்
கொய்போதி லொன்று குறையாரோ—தெய்வீகக்

௩௫௭. கல்வேழ முண்ணக் கடிவேழந் தந்தமையின்
வில்வேழ மூந்தருகை வேண்டாரோ—கல்லோல

௩௫௮. வெள்ளத் திரள்காப்ப விட்ட சடாடவியிற்
பள்ளக் கடல்சுவறப் பண்ணாரோ—வொள்ளழலாய்ச்

௩௫௯. சீறு பிறைவறிது சீறுமே தம்முடியி
லேறு பிறையினுட னேற்றாரோ—கூறுமதோ

௩௬0. வென்றே மொழிந்தா ளிருந்தோர் கமலேச
ரன்றே யுறவென் றறியாயோ—குன்றை

௩௬௧. யுரிய முலைக்கெதி ரோங்காது வாங்கும்
பெரிய திறலும் பிறிதோ—வரிமீனுங்

௩௬௨. கூற்றும் விடமு மடக்கியதுன் கூர்விழியி
னூற்றும் பகையென்கைக் கல்லவோ—சீற்ற

(பா-ம்) ௩௪௯. 'எந்திக்-கொல்லியுங்' ௩௫௧. 'வேட்ட நடமுரசும்'

௩௫௧. 'வேதமும் வீதி விடங்கத் திருப்பெயரும்'

௩௫௧-௩௫௩ } 'மூதுலகை, யெண்ணரிய கேள்வி யியற்றுதிரு வாணையும்
பண்ணரிய மூவாறிற் பாடுதலு-முண்ணெகிழ்ந்து'

௧௬௩. மடங்க லுரிப்புந் துடியடிப்பு மற்று
லுடங்க லிடைக்கலது நொய்தோ—தடங்கமட

௧௬௪. வோடுபெயர்த்த துனது புறவடிக்கா
வாடு மிகலோ வயலொன்றோ—மூடிருளைக்

௧௬௫. கண்ணுற் பலகாலுன் காரளகத் தெவ்வென்று
மெண்ணுற் கடிவ திலாததோ—வண்ணலுமுன்

௧௬௬. மெய்யின் வெறுப்பே தமக்கும் வெறுப்பென்று
செய்யு முரிமை தெரியாதோ—தையலே

௧௬௭. குன்று குனித்தார் விரும்பிற் குறுகாரோ
வென்று தாங்கித் திரங்காதே—நின்றுறங்கித்

௧௬௮. தேவர் விடைகொ டிருக்கா வணத்திருப்போ
தேவர் முகக்குந் தியாகமோ—தேவசபைச்

௧௬௯. செம்பொ னவமணிச்சிங் காதனத்திற் றேவியொடு
மும்பர்சே ளுபதியு முற்றிடவே—பம்பு

௧௭0. திருவா சிகையுந் திகழ்கண் டயமு
மருவார் கழுநீர்செவ் வந்தி—விரவார்

௧௭௧. பணியும் பலபணியும் பன்னெய் விளக்கி
னணியுஞ்செய் பூசை யழகுந்—துணியு

௧௭௨. மறையர கமவொலியு மந்திரத்தே வார
மறைதோத் திரவடியா ரார்ப்பு—முறைமையுற

௧௭௩. மத்தளங்க டாளங்கள் சின்னம் வளைகளுட
ளொத்தவெக்கா ளங்க ளுடன்குமுற—வொத்ததிரி

௧௭௪. புண்டரமுங் கண்டிகையும் பூணும் புனைந்துமுச்சிக்
கொண்டையுட னேவிடைமுன் கூட்டஞ்சேர்—மண்டபக்

௧௭௫. கொத்தி னடிப்பதியி லாளசபைக் கோலத்துக்
கொத்தலய வத்த முடன்காட்ட—வத்தகையோர்

௧௭௬. பொற்றட்ட மேந்தப் புகழ்விசிறி சாமரங்கண்
மற்றும் வரிசைகளால் வந்திக்கக்—கொற்றத்

௧௭௭. திருவந்திக் காப்புக்கொள் செல்வமோ தென்றன்
மருவந்த வாயி லருகே—பருவந்

௧௭௮. தருமுபசா ரங்கள்செவிச் சார்சமய மேயோ
வரையா வரங்கொடுக்கும் வாய்ப்போ—பரிகரத்தார்

(பா-ம்) ௧௬௮. ‘தேவர்விடை கொள்ளத் திருப்பே ருகந்தளிக்கும்’

௧௭௭. } ‘திருவந்திக் காப்புந் திருச்சா லகமு
௧௭௮. } முருவந்தித் தேகு முவப்போ-பரிகரத்தார்’

௩௱எகூ. பல்லிய மார்க்கும்பொற் பல்லக்குச் சேவையோ
வல்லியங் கோதை யமளியோ—புல்லத்தார்க்

௩௱அ௦. கேது திருவுளமோ யாண்டைத் திருநோக்கோ
மாது நினைநினைந்து வந்திலார்—போது

௩௱அக. விடிய வருவர் வருவரெனும் வேலை
யடியார் முடிவணங்கி யார்ப்ப—விடுபரிதித்

௩௱அஉ. தேருந் தியாகேசர் தெய்வத் திருத்தேரு
மூரும் பெருவீதி யுட்போதக்—காரிகையும்

௩௱அ௩. வந்து தொழுதெழுந்து மாணிக்கப் போழகை
முந்து விழியின் மூகந்துண்டாள்—சந்துதிரி

௩௱அச. நம்பா வுமைபங்கா நாயகர்க்கு நாயகா
வெம்பாலுன் னெஞ்ச மிரங்காதோ—வும்பர்தொழ

௩௱அரு. வைம்போ துதிர வடித்தகான் மாரன்ற
னைம்போ துதிர வடியாதோ—கம்பேந்தி

௩௱அசா. யச்சிலைக்கு நாணை யரிசிதலை போற்கரும்பி
னிச்சிலைக்கு மோர்சிதலை யெய்தாதோ—நிச்சவிழாச்

௩௱அஎ. சேவிப்பத் தாழ்த்துவருந் தேவர் விலங்கொருநாள்
வாவிப் பொருவேட்கும் வாராதோ—கோவிடுந்தே

௩௱அஅ. ரங்கட் குழவிக்குச் செய்ததுநின் னூழித்தேர்
திங்கட் குழவிக்குஞ் செய்யாதோ—வெங்காற்று

௩௱அகூ. மன்றல் கமழ்தீர்த்தந் தூர்த்த மனச்சினமித்
தென்ற லுடன்முடுகிச் செல்லாதோ—வென்று

௩௱கூ௦. ளிடநோக்க மஞ்சி யிவட்கு வலத்துத்
தடநோக்கந் தந்து தணந்தான்—மடநோக்கி

௩௱கூக. முன்னழகு கண்ட முதன்மயக்கின் மும்மடங்கு
பின்னழகு கண்டு பெருகினு—டன்னிற்

தெரிவை.

௩௱கூஉ. பரியு முனிவர் மறைத்தாலும் பத்தி
தெரியு மொருத்தி தெரிவை—மருவை

௩௱கூ௩. பிறையுடன் மோப்ப விறங்கிமறித் தேகாப்
பிறையுட னுதத பிறையுங்—கறைமிடற்றோன்

(பா-ம்) ௩௱எகூ. 'பல்லகிற செல்வமோ' ௩௱அஉ. 'ஊருமை பெருமை யுடன் போத'
௩௱அ௦. 'யாது திருவுளமோ' ௩௱அக. 'முடிக்கச் செல்லாதோ'
௩௱அஉ. 'தெய்வவா ழித்தேரும்' ௩௱கூ௦ 'விடமோக்கி'

௩௯௪. கண்ணாற் கடந்த வடையாளங் கைக்கொளவின்
வண்ணக் கமல மலர்மகளைப்—பெண்மையின்

௩௯௫. சீலத் தொருதானு மாறழித்த சின்னமே
போலத் திருவும் பொலிகுழலா—ளாலத்தை

௩௯௬. யுண்ணத் துணிந்த துடையா னிவைக்கிடையே
நண்ணப் பயின்றதென நாட்டத்தா—டிண்ணியகல்

௩௯௭. வில்லான் றிருமேனி விண்ணேயென் றந்தவிண்
ணெல்லாந் தழுவ வெழுமுலையாண்—மெல்லிடை

௩௯௮. யில்லைகொ லுண்டுகொ லென்றென் றிறைதிருக்கண்
வல்லையில் வைக்கும் வகைமானப்—பல்காசின்

௩௯௯. பட்டிகையும் வெண்ணிறப் பட்டு மொளியொளிரக்
கட்டிய செம்பொற் கடிதடத்தாள்—விட்டெறியும்

௪௦௦. பல்கோடி பந்தினும் பத்திமுத் தூசலினும்
வெல்கோ டியமகர வீணையினும—வல்லியரைச்

௪௦௧. சீறிப் பொருதுவெல்லுஞ் செவ்விபோய்ச் சீறாமே
யாறிப் பொருதுவெல்லு மாற்றலா—ளேறிய

௪௦௨. வேற்றா னுடனே யிவைநம் மவயவத்தே
தோற்றான் மொழிந்திடா தூதென்று—மேற்றாய்ப்

௪௦௩. புயலுங் குயிலும் பொறியவரி வண்டு
மியலும் பொழிலுக் கெழாமே—மயிலுடன்

௪௦௪. கிள்ளைசூழ் செய்குன்றிற் கிட்டாமே யோதிமக்
கொள்ளைசூ ழோடை குடையாமே—வெள்ளிய

௪௦௫. வேலை பொருவு மாமியத்தில் வீற்றிருக்குங்
காலை யொருத்திவந்து காரிகையே—மேலொருகை

௪௦௬. யோட்டிரக்குங் காலத்து மொண்முனிவர் பன்னியரை
வாட்டிரக்கஞ் செய்து மருள்செய்தார்—தீட்டரும்பொற்

௪௦௭. சிங்கா தனம்பெற்றுத் தேர்பெற்றிப் போதுவந்தாற்
பொங்கா தரவு பொறாக்குமோ—சங்கார்கை

௪௦௮. யான்மோ கினியா யணியோ டெதிர்படத்தம்
மான்மோகஞ் செய்து மருள்செய்தார்—தேன்மொழியார்

௪௦௯. கூடலிளங் கோக்கள் வனிதையர்க்குக் கோலவளை
போடும் பொழுதுமயல் பூட்டினார்—வேடப்

௪௧௦. பாதாய் மீன்வலையாற் பாவைதிரை மங்கைக்
கிரதாய் மால்செய்தின் புற்றார்—வரைமகளா

(பா-ம்) ௩௯௯. 'வெண்பளிதப் பட்டும்' ௪௦௦. 'மெல்லியரைச்'

சகக. மங்கை தவங்கள் புரிய வயோதிகாரய்த்
தங்கியின்ப வாய்மொழிகள் சாதித்தார்—நங்காய்

சகஉ. முழுதுமோர் கோல முதல்வர் பவனிக்
கெழுதுமோ வைகுதுமோ வென்றாள்—பழுதிலாண்

சகங. மூவரு மோதியவை கற்றோதின் மோகத்தா
லேவருவர் நம்பா விலங்கிழாய்—தீவருத்தா

சகச. தேட்டெழுது நள்ளாற்றுச் செய்யுளை யாமணியுந்
தோட்டெழுதில் வாடை சுடுங்கொலோ—நாட்டுதிரு

சகரு. வாலவா யான்திருநீ றள்ளிற் குலத்தரசு
போலவா னிந்துவெப்பும் போகாதோ—பாலனார்

சகசு. தைவந்து தென்னவர்கூன் றள்ளுதிருப் பாட்டெடுத்தாற்
கைவந்த வேள்சிலைக்கூன் காணுமோ—பொய்வந்து

சகஎ. போக்குந் தருமபுரத் தியாழ் முரியினாற்
றீக்கு மிசையாழ் சிதையாதோ—மாக்கடலுங்

சகஅ. தெவ்வரிடு கன்மிதப்பச் செய்ததிருப் பாட்டிசைத்தா
னைவித் திரவி னலியுமோ—வையாற்றுக்

சகசு. காவிரி யாறுமறி யூரன் கவிக்கிருகண்
மாவிரி யாறு மறியாதோ—மூவர் திருப்

சஉ0. பாடலா லுய்யலா மெங்கோன் பதமலருஞ்
சூடலா மென்று துணிந்தெழுந்தா—ளாடக

சஉக. த்யாகக் கொடியே தனிவளரச் செய்தொருநாட்
பாகற் கொடியே பலவறுப்பா—ளுகமச்

சஉஉ. சோதியிற் காசிக்குந் தொல்லம் பலத்திற்கு
மாதியிற் பேரூரா மாரூரன்—வீதியிற்

சஉங. பீலிக் குடைநிழலும் பேரிக் குழாமுழக்குங்
கோலித் திசைவிசும்புங் கொந்தளிப்ப—வேலையுஞ்

சஉச. சிந்த விடைக்கொடிமீ தாடத் திருத்தேரின்
வந்த பவனிவந்து வந்தித்தா—ணிங்கையா

சஉரு. ரூரன் புறம்பரனு மொக்கப் புறம்பென்றோர்
போன்பன் சிறம் பெருமாளே—கார்தவழும்

(பா-ம்) சகச. 'நள்ளாற்று மெய்ஞ்ஞானம்' சஉங. 'கோத்தளப்ப'
சகஅ. 'உய்வித்த வப்ப னுயிரென் னும யாப்பிசைத்தால்' சஉரு. 'ஊரன் புறனுய னைக்கப் புறனென்று'

௪௨௬. வெள்ளிக் கிரிபசும்பொன் மேருக் கிரியுறைந்து
முள்ளிச் சிறுபுற் றுறைந்தீரே—புள்ளுயர்த்தோன்

௪௨௭. வாதுபோய்க் காணு மலர்ச்சே வடிகாமத்
தூதுபோய்த் தேயத் துணிந்தீரே—மீதசைந்து

௪௨௮. மாணிக்கத் தண்டு மணிமன்று மாடியகூத்
தாணிப் புறங்கா டடைந்தீரே—பேணியே

௪௨௯. பெய்யுமடிக் காயிரம் பொன்னென்னப் பேறளிக்குங்
கையு மிரப்புங் கலந்தீரே—யையோவிந்

௪௩0. நாதாந்தக் கோலமொரு நான்மறையோன் யாகத்தே
தீதாம் புலைக்கோலஞ் செயதீரே—வேதாந்தக

௪௩௧. கேள்வியோர் காதிரண்டுங் கிட்டே லெமையென்று
வேள்வியோர் வைதனவும் வேட்டீரே—தாழ்விதனாற்

௪௩௨. புல்கிய துண்டோ வுமைதோய் புயமெனக்கு
நல்கிய துண்டே னலம்போமோ—கொல்கணிச்சி

௪௩௩. வீரரே யெவ்வூர்க்கு மேலூ ரெனநிறுத்த
வூரரே யெனறென றுருகினாள்—பேரிளம்பெண்

பேரிளம்பெண்.

௪௩௪. வேறொருத்தி பல்கலைக்கும் வேதாவி னாவிற்போ
யேறொருத்தி யேறு மெதிராதாள்—வேறினியென்

௪௩௫. றண்டா மரைமயிலுந் தாமரையும் பாமகளும்
வெண்டா மரையுமா மேனியாள்—வண்டாட

௪௩௬. முன்னஞ் சுமந்த தமையாமே மொய்ம்மணத்தை
யினனஞ் சுமந்திளைக்கி லெனசெய்யுந்—தென்னுலவை

௪௩௭. யாதி திருச்சா லகத்தோட மாட்டாதென்
றோதி மலர்பொதியா வோதியாண்—மோதித்

௪௩௮. திரைபோ யுலகஞ் சிதைப்பச் சிதைந்த
கரைபோல் வரிதுறந்த கண்ணாள்—ளரிபிரம

௪௩௯. ரென்பணியும் வன்மீகர் மன்றுட் டெனப்புலியும்
வன்பணியு முன்பணியும் வார்த்தையாண்—முன்பணைத்து

௪௪0. வானடையத் தாமே வளர்ந்து கவர்ந்தந்த
வானடையக் காணு வகைமையால்—வானெதுங்கி

௪௪௧. யீண்டு நிலைத்த தெனமருங்கைப் பாரப்பதெனப்
பூண்டு முகங்கவிழ்ந்த பூண்முலையாள்—வேண்டியநா

(பா-ம்) ௪௨௯. ' கவர்ந்தீரே '

௪௪௨. ணுற் பணைசை நகரத் தயன்பறந்துங்
காணுத் தலைசாய்த்த காரிகையும்—பூணுகம்

௪௪௩. பெய்துடைய பெம்மான்றன் பிட்டுண்ணப் புண்ணியஞ்
செய்துடைய செம்மனச் செல்வியுங்—கொய்துமக

௪௪௪. வன்றீந்த செங்காட் டமையுந் தலையிறைச்சி
நன்றீந்த சந்தன நங்கையு—மென்றிவர்க

௪௪௫. ளொண்பிறப்பே போலப் பிறப்பெய்தி னேவாது
பெண்பிறப்பே வேண்டும் பெரிதென்பா—ணண்பினரா

௪௪௬. யல்வினை சோலைகலந் தாயிரங் கோடியராய்ப்
பல்வினை யாட்டயரும் பாவையரை—வில்வினையுஞ்

௪௪௭. சூடகக் கைவண்டு மொய்வண்டுஞ் சூழ்ந்தாட
வாடகத் தம்மானை யாடுவீர்—பீடு

௪௪௮. விரவுதிரு வாசகத்து மெய்வாத வூரர்
பரவுதிரு வம்மானை பாடீர்—விரைகமழுஞ்

௪௪௯. சுண்ணப் பொடியிடிப்பீர் தொன்று ளவர்விளம்பும்
வண்ணத் திருச்சுண்ணம் வந்தோதீ—ரெண்ணிறப்பக்

௪௫0. கூடுதிருத் தெள்ளேணங் கொட்டுவீ ராங்கவர்
பாடுதிருத் தெள்ளேணப் பாட்டறையீர்—தோடவிழச்

௪௫௧. சாத்துதிருப் பூக்கொய்வீர் சம்புப் பரியமைத்தா
ரேத்துதிருப் பூவல்லி யின்றேத்தீர்—கூத்தி

௪௫௨. னடுத்ததிரு வுந்தி பறப்பீ ரவர்வா
யெடுத்ததிரு வுந்தி யியம்பீர்—தொடுத்தாடி

௪௫௩. மல்குதிருத் தோணோக்கீர் மாணிக்க வாசகர்
நல்குதிருத் தோணோக்க நாவறையீர்—பல்வரியீ

௪௫௪. ராற்றுதிருப் பொன்னூச லாடுவீர் நீடுமவர்
போற்றுதிருப் பொன்னூசல் போய்ப்புகழ்வீர்—சாற்றளிக்கு

௪௫௫. நன்னர் குயில்கிளிக்கு நம்ப ரிசையிசைப்பீ
ரன்ன ரிசைத்தனவே யாங்கிசையீ—ரென்னு

௪௫௬. மிவையிவை போதித் திருந்துழி மாத
ரவையவை கேட்கு மளவிற்—குவிகையளாய்

௪௫௭. வாங்கிச் சிவபத்த வாணி யெனுங்கிளியைத்
தாங்கிக் கனிகனிவாய்த் தந்தேந்தி—யாங்களிப்ப

(பா-ம்) ௪௪௨. 'தலைதாழ்த்த' ௪௪௪. 'நன்றரிந்த'
௪௪௩. 'பெய்துடைய கோவைத்தன்' ௪௪௬. 'சோலைகவர்ந்து'
௪௪௪. 'அன்றரிந்த' ௪௫௫. 'குயிலரிக்கு'

௪௫௮. முன்னமொரு சொல்லை முதல்வன் சொலவொருவன்
சொன்னதிருத் தொண்டத் தொகையெல்லா—மென்னமுதே

௪௫௯. பாடுக பாடுக பாடி நெடிதூழி
நீடுக நீடுக நீயென்றாள்—கூட

௪௬0. வுறைகின்ற வுன்னையத் துள்ளோ ரழகே
யறைகின்ற தொண்டரழ கன்றோ—பிறைநுதலா

௪௬௧. யெற்களவு பேச வடங்கா விடங்கழியார்
நெற்களவு போன நிசிவனப்பு—நெற்குழலை

௪௬௨. வாரி யிளைசையின் மாறர் வருமிருளு
மூரி யளக முடியன்றோ—காரிகையே

௪௬௩. பண்டையி னெல்வேலி மாறர் படுமுடற்கூன்
கொண்டையி லிட்டபிறைக் கூனன்றோ—பண்டு

௪௬௪. வணங்கா தவரை வணக்கவிறன் மிண்ட
ரணங்காக வைக்கு மசியு—மணங்கமழ்பூப்

௪௬௫. போக்கு மதமாப் பொருதே யெறிபத்தர்
நூக்கு நவியு நுதலன்றோ—மாக்கள்

௪௬௬. படுபடை யூனைப் படைத்தகண் ணப்ப
ரடுபடை விற்புருவ மன்றோ—நடுவிற்

௪௬௭. குலவு மியற்பகையார் கோட்புலியார் சுற்றம்
பலவு மடியப் படுத்துங்—கலிக்காமர்

௪௬௮. மெய்ச்சிறுத் தொண்டர்சேய் மெய்ப்பொரு ளையரிவ
ரச்சுறுக் காய மறவறுத்து—மெச்சுகழற்

௪௬௯. சிங்கர் மனைவிகர மூக்குச் செருத்துணையா
ரங்கைகலிக் கம்ப ரரிவைக்குச்—சங்கரன்

௪௭0. வீறு பழிநா விரிஞ்சையூர்ச் சத்தியார்
கூறு படப்படக் கொய்தெடுத்துஞ்—சீறிக்

௪௭௧. குலச்சிறையா ரேனாதி நாதர்குறு காரை
யலற்செய் முனையடுவா ரட்டுந்—துலக்கிய

(பாடம்) ௪௬௧. 'நற்குழலை' ௪௬௪. 'வணங்கா விடரை' ௪௬௫. 'நூக்குநவியம்'
௪௬௭. 'அடையப்படுத்தும்' ௪௬௮. 'அச்சுதன் காயம்'
௪௬௮., ௪௬௯. 'மெய்ச்சிங்கன், தேவி காத்தையவண் மூக்கைச் செருத்துணைதன், காவி விழிமைக் கலிக்கம்பன்—சேவுயர்த்தோன்'
௪௭௧. 'குலச்சிறையே னாதி முனையடுவான் கூடா
ரலைச்சிறை யெய்த வலைத்துந்'
" 'அலைச்செய்'

௪௭௨. வாளுமொரு தாய ரதிபத்தர் மாவடுமீன்
கோளுமிரு கண்ணின் குலமன்றே—தாளிணையிற்

௪௭௩. பொய்யடிமை யில்லாப் புலமையோர் காடவர்கோன்
செய்யடிமைக் காரியார் சேக்கிழார்—மெய்யிற்

௪௭௪. பணிந்து பரமனையே பாடுவார் பாட்டி
னணிந்த சிவப்புவா யன்றே—மணந்து

௪௭௫. தருமுத்தி மெய்ஞ்ஞான சம்பந்தர் பந்த
ரருமுத்து வெண்முறுவ லன்றே—திருமூலர்

௪௭௬. மந்திரத்திற் கூறும் வரிக்குயிலுஞ் சண்டேசர்
தந்திரத்தி னூட்டுந் தடம்பாலு—மைந்தெழுத்தி

௪௭௭. னாயர் நீலகண்டப் பாண ரமைக்குழலுந்
தேனாய வீணைத் திறநெறியு—மூனுதிர்த்த

௪௭௮. காரைக்கா லம்மை கனியுமுன் கையுரைத்த
பாரைக்கா மூர்த்தியார் பைஞ்சாந்துஞ்—சேருந்

௪௭௯. தருண வினிமையைந்துந் தண்மைய தொன்று
மருண மெழுமொழி யன்றே—வருபவர்க்குத்

௪௮௦. துப்பமைத்து நல்குமொரு சூத ரெறிசூது
மப்பரைக்கை கூப்பு மடுபகடு—மெய்ப்பொதுவின்

௪௮௧. வேண்டுமொரு கூற்றுவனார் மேன்முடியுங் கோன்முடியைத்
தீண்டு புகழ்த்துணையார் செங்குடமு—மாண்டைக்க

௪௮௨. ணன்போர் மிழலைக் குறும்பா ரூரர்க்கு
முன்பேர் மலையு முலையன்றே—பொன்போலு

௪௮௩. மானக்கஞ் சாறர் மகளளகப் பஞ்சவடி
ஞானக் கலையர் நறுந்தூம—மூன

௪௮௪. வினையர் மனக்கறுப்பு மிக்கோ ரொழுங்கு
மனைய வரிரோம மன்றே—புனையிழாய்

௪௮௫. தில்லையில் வாழந் தணர்நற் சிறப்புலியார்
வல்லையி லம்பர்ச்சோ மாசியா—ரில்லறத்து

௪௮௬. நாவற் சடையரிசை ஞானியார் பூசலார்
தேவத் திருமேனி தீண்டுநர்—நாவுரைக்குந்

(பா-ம்) ௪௭௬. 'கூவும் வரிக்குயிலும்'   ௪௮௨. 'அன்றே-வன்பான'
௪௭௯. 'அன்றே - கருணையினால்'   ௪௮௪. 'வினையருள வாணவமும்'
௪௮௦. 'துப்பனைத்தும்'
,, 'அப்பனையி லாளுடையார்க் காங்காயும்'   ௪௮௬. 'பூசலையார்'

௪௮௭. தங்கலையுஞ் சாலியரு ணேசனார் தாபதர்க்கு
வெங்கலை நெய்திழைக்கு மெல்லிழையுஞ்—செங்கணார்மு

௪௮௮. னுய்த்தநூ னீலநக்கர் தேவி யுமிழ்சிலம்பி
வைத்தநூல் யாவு மருங்கன்றோ—பத்திவிடு

௪௮௯. மல்கு லாணைக் கப்பூதி யார்மகத்தந்
தொல்கு மரவி னுருவன்றோ—நல்வணிக

௪௯0. ரம்பொ னமர்நீதி யார்கோ வணநிறுத்த
பைம்பொற் றராசு பாடன்றோ—நம்பதிக்கே

௪௯௧. தண்டி யடிக டடாகத்து நீலகண்டர்
மண்டி யிளமைபெறு வான்குளத்துங்—கொண்டவெழுத்

௪௯௨. தஞ்சு மியம்பிப் பசுபதியா ராழ்கயத்தும்
விஞ்சு முளரி விரிகோலஞ்—செஞ்சொல்

௪௯௩. படியு முகமு மிருகையும் பஞ்சூட்
டடியு முடன்சிறப்ப வன்றோ—கொடியே

௪௯௪. திருவா திரைக்குநா சிங்க முனைய
ரொருவாத பாணர்க் குதியர் —சொரிபொன்னு

௪௯௫. மோணகாந் தன்றளியி னண்பர்க் கொளித்தளித்த
காணமு மேனிக் கவினன்றோ—வாணிலவு

௪௯௬. மென்மை முருகர் கணநாதர் வேணியர்க்குத்
தொன்மை தருபூந் தொடையன்றோ—நன்மைக்

௪௯௭. கலிநீதி யார்நமி நந்திகணம் புல்லர்
மலிய விடுந்தீப மாண்பு முலக

௪௯௮. முயத்தகு வாயிலா ருட்பூசை யின்கண்
வியத்தகு ஞான விளக்கு—மியற்காநவூர்ச்

௪௯௯. சென்னிபுகழ்ச் சோழர் திருநாளைப் போவார்வீழ்
வன்னிநிற மும்பூண் மணியன்றோ—கன்னித்

௫00. திருமங் கையைவென்ற செவ்விக் கிவரே
யருமங் கையர்க்கரசி யன்றோ—கிரிமுகிலின்

(பா-ம்) ௪௮௯. 'சிவநேச ரப்பூதி யார்மகத்தந்து' ௪௯௭. 'கலிய னமிநந்தி காரிகணம் புல்லன், மலியவிடுஞ் சோதி வடிவும்'
௪௯0. 'பைம்பொற் றுலையும்'
௪௯௧. 'தண்டி யெடுத்த தடாகத்தும்'
௪௯௫. 'நாகையிற் கீழ்வேளூர் நம்பர்க் கொளித்தளித்த, மாகையிற் பொன்னும் வடிவன்றோ-வாகத்து'

௫0௧. மூசுவார் மென்முலைக்கற் பூர முழுநீறு
பூசுவார் பூதிப் பொடியன்றே—வீசனையே

௫0௨. தூற்று திருக்குறிப்புத் தொண்டருஞ் சாக்கியரு
மெற்று சிலையு மெறிசிலையு—மற்றச்

௫0௩. சமையத்துந் தெய்வத் தலத்து நெகிழா
தமையப் பிடித்ததிட மன்றே—நமது திரு

௫0௪. வாரூர்ப் பிறந்தா ரயலோ விவர்க்குமிப்
பேரூர்ப் பிறப்பே பிறப்பன்றே—தீராத

௫0௫. பத்தராய்த் தாழ்வாரப் பாலுமடிச் சார்ந்தார்கள்
சித்தமே சங்கரன்பாற் சேர்வித்தோ—ரித்தனையே

௫0௬. ரிங்கிவ ரன்றேவென் றேற்பக் கிளிதெளியக்
கொங்கிவ ரோதியுடன் கூறுதலு—மங்காந்

௫0௭. தாகர வென்றுருகு மவ்வேலை மூன்று
புரகான் வீதி புகுந்தான்—காமுகிழ்த்துத்

௫0௮. தத்தையை வைத்துத் தமரிற் சதகோடி
யொத்தயல் செல்ல வுடன்சென்று—ளத்திரளை

௫0௯. நீந்தி நுதலு நிலமணப்பத் தாழ்ந்துதொழு
தேந்தி மலைகுனித்த வேந்தலே—மாந்தளிர்

௫௧0. வண்ணத் துமையாண் முலைத்தழும்பு மார்பகத்தி
னண்ணத் தவஞ்செய்த நாயகனே—கண்ணப்ப

௫௧௧. ரெச்சிற் றடியு மெழில்வாயின் மஞ்சனமு
முச்சிப்போ துங்கொள்ளு முத்தமனே—செச்சைமயில்

௫௧௨. வாகனத்தோன் வானவரைக் காத்துமாச சூர்தடிய
மாகனத்த வேலுதவும வள்ளலே—மோகமிகப

௫௧௩. பிட்டுக்கு மண்ணுஞ் சுமந்து பிரமபினடி
பட்டுப் பரிந்தளித்த பாக்கியனே—நிட்டைபெறுஞ்

௫௧௪. சங்கப் புலவருடன் சங்கத்தி லேயிருந்து
கொங்குதேர் வாழ்க்கை கொடுத்தோனே—யங்கயற்க

௫௧௫. ணம்மை யுடன்சுந் தரபாண் டியனாகி
யிம்மையிலே நன்மைதரு மெம்மானே—மும்மையுல

௫௧௬. கேந்துமுசு குந்தமன்னற் கின்பமுறு மெவ்வாமு
மீந்ததியா கேச விறைவனே—வீந்தவிரு

(பா-ம்) ௫0௨. 'பற்று திருக்குறிப்பன் சாக்கியன் பண்டுதலை'

௫0௫. 'சித்தத்தைச்'

௫௧௭. கண்ணுங் கவிவினவக் கச்சிகம லாலயத்து
நண்ணும் படிகொடுத்த நங்கோவே—தண்ணியலாக்

௫௧௮. காயினு நீசிலநாள் வைகிய காரணத்தின்
வேயினு ணேயம் விளக்கின்றேன்—வாயினுற்

௫௧௯. சுட்டாலு நின்கச்சிச் சூதத் திருப்பதனுல்
விட்டாலுங் கோகிலத்தை வேட்கின்றே—னட்டாலும்

௫௨௦. பிள்ளை பணித்தபணிப் பெண்ணை யகலாத
புள்ளை யெளியேன் புகல்கின்றே—னுள்ளயரக்

௫௨௧. கைக்கு மெனினுமுன் காதுபெறப் பெற்றமையி
னுய்க்கு மிசையை யுவக்கின்றேன்—மெய்க்கழலாய்

௫௨௨. வேடைய தெய்த வெதுப்பினு நின்குவட்டு
வாடைய தென்று மகிழ்கின்றேன்—கோடிநம

௫௨௩. ஞகு மெனினுமுன் வேணி யணிந்தமையி
ஞகு மதியை நயக்கின்றேன்—வேகத்தா

௫௨௪. லிக்கு வளைத்துவே ளெய்யவெறுப் பாயினுமுன்
மெய்க்கு வளைத்தார் விழைகின்றேன்—கைக்குதவா

௫௨௫. யென்று திருத்தேர் நிலையளவு மேத்தெடுத்துத்
துன்று கழுநீர்த் தொடைபெற்று—ணின்ற

௫௨௬. வினைப்பகையுங் காமத்து விற்காமன் செய்யு
முனைப்பகையுங் கூட முடித்தா—டனைப்பணிந்தே

௫௨௭. யிவ்வா றெழுபருவத் தெல்லோரு முன்போத
வுய்வார் பவனிக் குடன்போதச்—சைவ

௫௨௮. வழிப்போந்தான் றாதாய்ப் பரவையார் மாடத்
துழிப்போந்தான் போந்தா னுலா.

நேரிசை வெண்பா.

மாதர் நலங்கொண்டு வீதி வலங்கொண்டு
மாதை யிடங்கொண்டு வாழ்கந்த—நாதனடிக்
கொண்டுதியா கேசர்பூங் கோயிற்சிங் காதனமேற்
கொண்டா ரசபைநடங் கொண்டு.

(பா-ம்) ௫௧௯. 'வெஃகினேன்' ௫௨௮. 'சந்தாய்ப்'
௫௨௪. 'தார் விரும்பினேன்'

பயன்

நாட்டுங் கமலைத் திருவுலா நற்செவியாற்
கேட்டும் படித்துங் களிரின்பங்—காட்டும்
பொருளைப் புகழ்ந்து தினம் போற்றத்யா கேச
ரருளைப் பெறுவா ரவர்.

சிறப்புப் பாயிரங்கள்.

க. தெள்ளுதமி ழாரூர்த் தியாகேசர் மெய்பண்பு
கொள்ளுங் கமலையுலாக் கூறினனு—துள்ளக்
குவிவீர ராகவன்சொற் கூடிற் புலவீர்
கவிவீர ராகவன்சொற் கண்டு.

(கட்டளைக் கலித்துறை.)

உ. புவியோர் பெறுந்திரு வாரூ ருலாவைப் புலவர்க்கெலாஞ்
செவியே சுவைபெறு மாறுசெய் தான்சிவ ஞானவனு
பவியே யெனுநங் கவிவீர ராகவன் பாடியநற்
கவியே கவியவ னல்லாத பேர்கவி கற்கவியே.

[இஃது, இலங்கைப் பரராசசேகரரென்னும் அரசர் பாடிய செய்யுளென்று தமிழ்நாவலர்சரிதையால் தெரிகின்றது.]

திருவாரூருலா முற்றிற்று.

ஸ்ரீ தியாகராசர் துணை.

கணபதிதுணை.

திருவாரூருலா

அரும்பதவுரை.

காப்பு.

வாதாவிவிநாயகர்துதி. கமலை - திருமகள், திருவாரூர். கம் - நீர். மீ - மேலே. வேழம் உக - கொறுக்காந்தட்டைகள் உகும்படி.

மாற்றுரைத்தவிநாயகர் துதி.
போற்று உரைத்த-துதிகளைக் கூறிய. ஆரணமே - வேதமே. கைச்சிலம்பு - கையையுடைய மலைபோல்வார். திருமுதுகுன்றத்திற் பெற்றுத் திருமணிமுத்தநதியில் இட்டு இத்தலத்தில் தேவதீர்த்தத்தில் எடுத்த பன்னீராயிரம் பொன்னைச் சுந்தரமூர்த்தி நாயனருக்கு மாற்றுரைத்துக் காட்டியது பற்றி, இவர் இத்திருநாமம் பெற்றனர். (தியாக. கட. ௬).

அவையடக்கம்.

சோதி கையும் - சிவபெருமானது திருக்கரமும். மா நாகமும் - பெரிய வாசுகியென்னும் பாம்பும். பூநாகம - நாகப்பூச்சி; (திருக்கழுக்குன்ற. அவை.)

நூல்.

௧. தேவு - தெய்வம். ஒன்பானெனும் பேறு-நவந்தருபேதம்.

௨. நாதாந்தமேயாய்-நாததத்துவத்திற்கு அப்பாலாய்.

௩. உயிர்களை உய்வித்தற்பொருட்டு, பராசத்தி தவஞ் செய்துகொண்டு எழுந்தருளியிருத்தல்பற்றி, இத்தலம், பராசத்தி யெல்லை என்றும் சத்திபுரமென்றும் வழங்கப்பெறும்; “இறந்திடா ஞானசத்தி யெல்லையாமாரூர்” (திருவாரூர்ப்பு) என்பதனு லுணர்க. பராசத்தி யென்றது கமலாம்பிகையை.

௬-டு. இடையில் இளைப்புறுமல் நிறைவேற்றுவோரே தலைவரென்று திருமாலும் இந்திரன் முதலிய தேவர்களும் தம்முள் நிச்சயித்துக்கொண்டு சென்று குருக்ஷேத்திரத்தில் யாகமொன்று செய்கையில், தேவர்கள் அயர்ச்சியடைந்துநின்றுவிட, திருமால் அதனை ஆயிரம்வருடத்தில் நிறைவேற்றித் தாமே தலைவரென்று செருக்குற்றனர்; சிவாஞ்ஞையால் யாகத்தீயிலிருந்து அப்பொழுது, ஐசுவரமென்னும் பெயரையுடைய வில்லொன்று எழுந்தது. அவர், களிப்பின்மிகுதியால் அதனைக் கைப்பற்றி வளைத்து அம்புகளைத் தொடுத்துத் தூத்தத் தேவர்கள் ஓடிவந்து இத்தலத்தை அடைந்தார்கள். உடன்வந்த திருமால் இத்தல விசேடத்தால் தம் வன்மையும் செருக்கும் குறையப்பெற்று மயக்கமுற்று அவ்வில்லையூன்றி அதன் தலையின்மேல் தமது தலையைச்சாய்த்துத் துயில்வாராயினர். அப்பொழுது தேவர்கள் பிருகஸ்பதியின் குமாருடைய கட்டளைப்படி அவ்வில்லின்கீழே ஒரு புற்றை உண்டாக்கித் தாம் கறையான் வடிவங்கொண்டு அப்புற்றுவழியாகச் சென்று மேற்கூறிய வில்லினது நாணின் அடியை அரித்தபொழுது சிவபெருமான் அப்புற்றிலிருந்து சோதிவடிவாகத் தோற்றினரென்பது வரலாறு. (திருவாரூர்ப்பு, வன்மீக).

எ. சனகாதிகளுக்குக் கலியின் துயரம் தீர்த்ததுபற்றி இத்தலத்திற்குக் கலிசெலாநகரம் என்பது ஒரு திருநாமம். (திருவாரூர்ப்பு, தலமகிமை.

அ. குணதீரம் - கீழ்கரை. ஈர்த்த - அறுக்கப்பட்ட.

௯. தம்முடைய தமையனார் உண்ணவைத்திருந்த கனி முதலியவற்றை அவரனுமதியின்றி உண்டு, அந்தத் தோஷபரிகாரமாக அவரால் தம்முடைய கைகள் அரியப்பெற்ற சங்கமுனிவரென்பவர், இத்தலத்துள்ள அமுததீர்த்தத்தில் ஆடி அக்கைகள் வளரப்பெற்றனர்; இதனால் அத்தீர்த்தம் சங்கதீர்த்தமென்று பெயர் பெற்றது; (திருவாரூர்ப்பு. சங்க) "கரங் கொடுத்துச் சங்கருக்குக் கனைகடல் வாய்த் துயில்வோர்க்குச், சிரங்கொடுத்த பெருஞ்செல்வத் திருவாரூர்" (திருவாரூர்ப்பு. அசலே. ௧௧.) என்பதனாலு மறிக.

௧௦. கமலை - திருமகள். திருமாலுக்குத் திருமகளை மணஞ்செய்வித்ததை மகாலட்சுமிச் சருக்கத்தாலுணர்க. (திருவாரூர்ப்பு.)

௧௧-௧௪. கண்ணன் கருத்து-புத்திரன் வேண்டுமென்பது. இக்கண்ணிகளால், தியாகராஜமூர்த்தி, முதலில் திருமாலாலும் அப்பால் இந்திரனாலும் பூசிக்கப்பெற்றுப் பின்பு முசுகுந்த சக்கரவர்த்தியால் இத்தலத்திற்கு எழுந்தருளினமை கூறப்படுகின்றது. (திருவாரூர்ப்பு. தியாகராச கந்த. கந்தவி). தொடிக்கைமான் - உமாதேவியார்.

௧௫-௧௬. கோ-பசு. கூலிக்கு ஊர்ப் பசுக்களை மேய்ப்பவனாகிய வணிகனொருவன் ஓடிப்போன பசுவொன்றைத் தொடர்ந்து இத்தலத்தைச் சூழ்ந்த புண்ணியத்தால் மறுபிறப்பில் தசானனதேசத்து அரசனாயினன்; அப்பசு மறுபிறப்பில் அவனுக்கு மந்திரியாயிற்று; இருவரும் பின்பு முத்தி பெற்றனரென்பது வரலாறு. (திருவாரூர்ப்பு. பிரதக்ஷிண.)

௧௭. திரிசங்கு - திரிகின்ற சங்குகள்; ஓரரசன். வசிஷ்டமுனிவருடைய பிள்ளைகளின் சாபத்தாற் புலையன் வடிவம் பெற்ற திரிசங்கு வென்னுமரசன், கௌசிகமுனிவருடைய கட்டளையால் இத்தலத்தை யடைந்து தேவதீர்த்தத்தில் ஆடி நல்ல உடம்பு பெற்றானென்பது வரலாறு. (திருவாரூர்ப்பு. திரிசங்கு.)

௧௭-௧௮. சுருதியன் - கேமசருமனென்னும் அந்தணன்; இவன் நீர் வேட்கையுற்றுப் பரத்தையொருத்தி கொடுத்த கள்ளைக் கள்ளென்றறியாமற் பருகிப் பின்பு தெரிந்து வந்து இத் தேவதீர்த்தத்தில் ஆடி அப்பாவம் தீரப் பெற்றனன். காரி - இந்திரன். ஆவி கொள்வினை யென்க. இந்திரனுக்கு விருத்திர ஹத்தியை இத்தீர்த்தம் போக்கியது. (திருவாரூர்ப்பு. கேம. இந்திர.)

௧௮-௧௯. வடக்கேயுள்ளகயையால் தீர்க்கப்படாததான நன்றிமறப்பென்னும் பாவத்தை இத்தலத்துள்ள கயாதீர்த்தம் ஒருபேய்க்குத்தீர்த்தது. (திருவாரூர்ப்பு. கயா) இத்தீர்த்தமுள்ள இடம் கயக்கரை யென்று இக்காலத்து வழங்கும்.

௨௦. கோடி முனிவர்கள் வந்து தவம் புரிந்து தரிசித்த பொழுது, வன்மீகநாதர் கோடியளவான திருவுருவங்கள் கொண்டு அவர்களுக்குக் காட்சி கொடுத்தருளினர். (திருவாரூர்ப்பு. உருத்திர)

௨௦-௨௧. தேர் பத்தன் - தசரதன். ஒரு சித்தன் - சித்தீசனென்னும் அரசன். இவர்களுக்கு ஸ்ரீவன்மீகநாதர் மகப்பேறு அருளினர். (திருவாரூர்ப்பு. தசரத; சித்தீ.)

௨௧-௨௨. கோகருணரென்று பெயருள்ளவர்களாகிய இருவர்க்கு முத்தியளித்தனர். (திருவாரூர்ப்பு. கோகருணச்)

௨௨-௨௩. முருகு-இளமை. சித்திரகாயம் - புலி. குலிசித்திரநாமம் - குலிசேசனென்னும் திரமான பெயரை; கேகயநாட்டரசனாகிய குலிசனென்பவன் தன்னிடம் பாரணஞ் செய்ய வந்த துருவாச முனிவருக்கு ஊனோடு கலந்த உணவை அருத்திய குற்றம்

பற்றி, அவரால் புலியாகச் சபிக்கப் பெற்று இத்தலமடைந்து அவ்வுருவம் தீர்ந்தனன். (திருவாரூர்ப்பு. குலிசே)

உ௩-உச. முத்து ஈர்த்த-முத்துக்களை இழுத்த. கலிக்கு அஞ்சி மூன்றரைக் கோடி புண்ணிய தீர்த்தங்கள் இத்தலத்தை அடைந்தன. (திருவாரூர்ப்பு. சர்வ).

உரு-உசு. ஓர் ஏழும் - திருவாரூர், திருநாகைக்காரோணம், திருக்காரூயில், திருக்கோளிலி, திருமறைக்காடு, திருநள்ளாறு, திருவாய்மூர் என்னும் ஏழுதலங்களும், ஸ்ரீ தியாகராஜமூர்த்திகள் எழுந்தருளப்பெற்றிருத்தலின், இத்தலங்கள் ஸப்தவிடங்கஸ்தலமென்று கூறப்படும்; இதனை, "சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு, காரார் மறைக்காடு காரூயில்–போரான, ஒத்ததிரு வாய்மூ ருவந்ததிருக் கோளிலி, சத்த விடங்கத் தலம்" என்னும் ஆன்றோர் திருவாக்கா லுணர்க. விடங்கர்-தியாகராசர்; இவ்வெழுவருள் இத்தலத்து மூர்த்திக்கு வீதிவிடங்கரென்பது திருநாமம்.

உஎ. மணித்தண்டு-மாணிக்கத்தண்டு. இத்தலத்தில் ஸ்ரீ தியாகேசருடைய திருவாடுதண்டு மாணிக்கத்தண்டென்று கூறப்படும். தியாகேசர் சிங்காதனம் இரத்தினசிங்காதன மாதலின், 'மணிச் சிங்காதனம்' என்றார். பெருமாள்-பெருமையை யுடையவர்.

உஅ. தேவரகண்டரென்பது தியாகேசருடைய திருநாமம்.

உகூ. தியாகேசருடைய துவசம் தியாகக்கொடி என வழங்கும்.

௩உ. வாதித்தல்-விலங்கிடல்.

௩ரு. பங்குனியுத்தரத்தில் தியாகேசருடைய திருவடியைத் தரிசிப்போர் முத்தி பெறுவர்

௩எ. திருமகளுக்கு மணஞ்செய்வித்தது.

௩கூ-௩அ. கடு-விடம். சூரியோதய வர்ணனை. தனது மகளென்றது திருமகளை. மருகன் - திருமால். கனமணி-கவுத்துவம். தினமணி-சூரியன்.

௩கூ. அல்லியங் கோதை யென்பது, அம்பிகையின் திருநாமம். நீலோத்பலாம்பிகை என்பர்.

சு0-சக. இரண்டு-உவர்க்கடலும், கட்கடலும். ஐந்து-நெய்க்கடல் முதலியன. இந்நூலாசிரியர், இக்கருத்தை, 'ஆட்ட,முதுபெருங் கடலோ ரைந்தும்' (நகர. உஎ.) எனத் திருக்கழுக்குன்றப் புராணத்திலும் அமைத்திருக்கின்றார்.

சஉ-ச௩. சேடனாகிய காப்பைத் திருக்கரத்தில் அணிந்து; பொறை வில் - மேருவாகிய வில். கணைக்கு அணையாய்-அம்பாகிய திருமாலுக்குப் படுக்கையாகி. கோடாத தேர் - பூமி. சாதிபற்றியும் தலைமைபற்றியும் வாசுகியின் ஒழிவில் சேடன்மேலேற்றப்பட்டது. கோடு-மலை.

சச-சரு. மருங்கை யொத்தது நூல். சஅரு-ம் கண்ணி முதலியன ஈண்டு ஆராயத்தக்கன.

சரு-சசு. அராக்கச்சு - ஆதிசேடனாகிய கச்சு. உடைவாளிற்குச் சூரியனும் அராக்கச்சிற்குக் கேதுவும் உவமைகள். மருளிக்கொள-ஒப்ப.

சஎ-சஅ. உழை - மான். காப்பு - சேடன். உழை இடக்கரத்தும், காப்பு வலக்கரத்தும் உள்ளவைகளாதலின், இரண்டிற்கும் இரண்டு மதிகள் வேண்டுவன வாயின. செவ்வந்தித் தோடுகளுக்கு மதிகள் உவமை. ஆற்றிய - ஆற்றுதற்கு.

சகூ. நீலரத்நகண்டசரத்திற்கு உமாதேவியாருடைய கை உவமை.

சகூ-ருக. உரகன் - ஆதிசேடன்; அவன்தாங்கு மடந்தை - பூமிதேவி; அவள் தந்தை - பிரமதேவர்; அவள் காந்தன் - திருமால். அவர்கள் பிறப்பைத் தாங்கும் உறுப்புக்கள் - திருத்தோள்கள்; அவற்றை உரகன் தழீஇ

யென்னவென்க. இலயப்புயங்கம் - புயங்கநடனம்; அரவுபோல் ஆடல். வலயப் புயங்கம்-பாம்பாகிய வாகுவலயம். வாகுவலயங்கட்குச் சேட னுவமை.

ருக-ருஉ. மிடற்று மஞ்சு-நீலகண்டமாகிய மேகம். புரிநூல்-பூணூல்.

ருஉ-ருச. கஞ்சம்-தாமரை. குருகு அங்கைநாயகி - வளையலையணிந்த அழகிய கையையுடைய உமாதேவியார். செங்கழுநீர் சேர்த்தமை - செங்கழுநீர் மாலை. கங்காதேவியாருடைய சிவந்த கண்களின் ஒளிக்குச் செங்கழுநீர்மாலையும் நகையொளிக்கு முத்துமாலையும் உவமைகள்.

ருச-ருசு. மார்த்தாண்டன்-சூரியன்; எழுவாய். சூரியனைப் பாரதயுத்தத்தில் மறைத்த முன்னோன்-திருமால். தடித்து - மின்னல். இரத்தினகடகத்திற்குச் சூரியன் உவமை.

ருசு-ருஅ. உந்தியென்பது ஆற்றிற்கும் கடலுக்கும் நாபிக்கும் பெயர். தன்பூதம் - அப்பு. பந்தி மருவு தரம் முத்து-வரிசையாக மருவிய தகுதியை யுடைய முத்துக்கள்; முத்தாலாகிய உதரபந்தனத்திற்கு நுரை உவமை.

ருஅ-சுo. இவற்றால், திருவடிகளில் ஆடரவமும் கிண்கிணியும் அணிந்தமை கூறுகின்றார்; இவை ஆடரவக் கிண்கிணியென்றுங் கூறப்படும். இவ்வாலாற்றை உகரு-ம் கண்ணிமுதலியவற்றா லுணர்க.

சுக-சுஎ. இவற்றால், திருமேனியிற் பச்சைக்கருப்பூரம் சாத்துதல் கூறுகின்றார். கருப்பூரத்திற்குப் பாற்கடற்றுளிகளின்செறிவும் நீறும் நிலவும் மூத்தும் கங்கையும் நகையும் உவமைகள்.

சுக. திருப்பாற்கடலில் திருமாலின் மார்பில் தியாகேசர் முதலில் எழுந்தருளியிருந்தமை ஈண்டு அறியற்பாலது.

சுஉ. திருமேனியாகிய தழல்.

சுச. திருநெல்வேலியில் மூங்கிலடியில் தோன்றியதுபற்றி, சிவபெருமான், வேய்முத்தென்று கூறப்படுவர்.

சுஅ. பளிதம் - பச்சைக்கருப்பூரம்; பளிதமாகிய மதி. ஊர் - பரிவேடம்.

சுகூ-எஉ. இவற்றால், நீலக்கண்ணடிபார்த்தல் கூறப்படுகின்றது. சிவபெருமானுடையதிருமேனியின் ஒவ்வொருகூற்றைக் கவர்ந்த உமாதேவியார் முதலியோருடையதவத்திலும் அதனை முற்றுங் கவர்ந்த நிலைக்கண்ணடியின் தவமே பெரிதென்றபடி. கண்ணடி,உலோகத்தாலும்செய்வித்தலுண்டு. சுருதி நிலைக்கண் நாடித் தோன்ற அரியான் - சிவபெருமான். பருதி-வட்டம்.

எரு. வேதவனம் - வேதாரணியம். அடைத்தோன்- திருஞானசம்பந்தமூர்த்திநாயனார். அது திறந்தோன் - திருநாவுக்கரசுநாயனார். தூதுவிடுத்தோன்-சுந்தரமூர்த்திநாயனார். சொற்பாட்டு - தேவாரங்கள்.

எச. நானூறு காரிகையை நல்கினோன்-நானூறு கட்டளைக்கலித்துறையாலாகிய திருக்கோவையாரை அருளிச்செய்த மாணிக்கவாசகர்.

எரு. கல்லெனல் - ஒலிக்குறிப்பு. கல் என்னும் உண்டியான் கான்மூளை-கல் லென்கின்ற உணவையுடையவராகிய, சிலாதமுனிவருடைய புத்திரரான திருநந்திதேவர். சிலாதரென்பதற்குக் கல்லையுண்பவரென்று பொருள்.

எரு-எகூ. விசயன் செம்மலுக்கு - அருச்சுனனுடைய செவ்விய மற்போருக்கு. தோள்கொடுத்த செம்மலை - சிவபெருமான், செம்மல்-நிர்மாலியம்,

பெருமையிற்சிறந்தசண்டேசநாயனார். மயிலை-மயிலாப்பூரில்.

எஎ. என்பினாற் பெண்ணைப்பெற்றென்க. பெறாத ஆண்பெண்ணை - ஈனாத ஆண்பனையை; ஆண்பனையைப் பெண்பனையாகச்செய்தோர் - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

எஅ. பூதியம் - உடம்பு. மைந்தனுக்கு உயிரையளித்தோன் - திருநாவுக்கரசுநாயனார்.

எகூ. அப்பு அரவை இட்ட-ஆகாய கங்கையையும் பாம்பையுமணிந்த. தூதினாற் பரவையினது விருப்பத்தையடைந்தவர்-சுந்தரமூர்த்திநாயனார்.

அ0. அஞ்சு அம்புவாசி - (மன்மதனுடைய) ஐந்துபாணங்களின் விசேடத்தை. அம் சம்பு வாசி-அழகிய நரியாகிய குதிரைகளை. அழைத்தோன்-மாணிக்கவாசகர்.

அ0-அக. துஞ்சு அமளி அம்பர்க்கு - தூங்குதற்குரிய படுக்கையை நீராகவுடைய திருமாலுக்கு. போதற்கு - பிரமதேவற்கு. சுந்தரமூர்த்திநாயனாருடைய திருவருளால், தியாகேசரைத் திருவம்பரிலுள்ள தம்முடைய யாகசாலைக்கு எழுந்தருளச்செய்தவர், சோமாசிமாறநாயனார். இக்கதையை, இந்நூல், கஉக, கஎஎ, சகூ0-ம் கண்ணிகளாலும், "இகத்துக்குப் போகமறுமைக்கினிய பேரின்ப மெவர்க்கு நல்கிச், சகத்துக்குப் போகவினை தூரந்தவா ரூரிறையைத் தையல் செம்பொ, னகத்துக்குப் போகவென விடுத்தமட்டோ சோமாசி யம்பர்ச் செய்யு, மகத்துக்குப் போகவென வாய்மலர்ந்த கவிமூகிலை வாழ்த்தி வாழ்வாம்." (பாயிரம், கூ.) என்னும் திருக்கடவூர்ப்புராணச் செய்யுளாலும், திருவம்பர்ப்புராணத்துள்ள மாறநாயனார் வழிபடுபடலத்தாலு முணர்க.

அஉ. கால் சிலம்பின் சந்து அணிந்து-தென்றற்காற்றையுடைய பொதியின்மலையில் உண்டாகும் சந்தனக்காப்பைச் சாத்தி. தினந்தோறும் பூசையில் சிவபெருமானுடைய திருவடிச்சிலம்போசைகேட்டவர் - சேரமான்பெருமாணாயனார்.

அஉ-அரு. நூல்சிலம்பக்கற்று-நூல்களை மிகக்கற்று; ஆவிக் காவிக் கமலைவாய்-தடாகங்கள்தோறும் நீலோற்பலங்களையுடைய திருவாரூரில்; கன்று ஆவிக்கு மகவை ஆவிகளைந்தோன் - மநுநீதிச்சோழன்; பெரியபுராணம் திருவாரூர்ச்சிறப்பைப் பார்க்க.

அரு-அச. சற்றேனும் நீ எள்வாய் அலை-சிறிதேனும் நீ இகழாதே. 'என்னை என்வாயிலுமிழ்' என்றவர், வரகுணபாண்டியதேவர்; இதனை, "வழிபடுமொருவன் மஞ்சனத் தியற்றிய, செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு, பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன, இடித்துக்கொண்டவனெச்சிலைநுகர்ந்தும்" (உஅ) என்னும் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையாலும், "பரிந்திடை மருதர் நன்னீ ராடமுன் பாப்பு மெள்ளைக், கரந்தொரு கள்ளன் றின்னக கண்டவர் கொடுசெ லுங்கா, லருந்திய தென்னை யென்ன வரன்றமர்க் கடிமை யாக, வரும்பிற வியின்க ணென்றூன் மன்னவ னயின்றூன் வாங்கி" எனனும் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்தாலும் (சஅ-உரு.), மருதவனப்புராணம் வரகுணச்சருக்கம் கூகூ-ம் செய்யுளாலுமுணர்க.

அஎ. கம்பிக்காதழகரென்பது, தியாகேசர் திருநாமம்.

அஅ. தானமுதன்மையர்-ஸ்தானீகர்.

அகூ. சைவச்சுருதித் தலைவர்கள் - ஆதிசைவர்கள். பரிகாத்துச்சேயோர்-தொண்டுசெய்பவர்.

கூக. போற்று-துதி.

கஃக-கஉ. கூற்றை அழலுமுளரி - சிவபெருமானுடைய திருவடித்தாமரைகளை. அகக்கோளர்-உள்ளேகொண்டிருப்பவர்கள்.

கங. தண்டு - மாணிக்கத்தண்டு. விட்டதிருவாசல்-விட்டவாயில். இது. சந்நிதியிலுள்ள பெரியகோபுரத்தையடுத்த வடக்குவாசல்.

கச. எடுப்பளவோ-எடுத்தல்மட்டுமோ. காராயவண்ணக்கணை - திருமாலாகிய கணைகள்.

கடு. உரகுணம்-பாம்பாகிய நாண். பீடுகெழீஇ-பெருமைபொருந்தி.

கசு. அன்றைத் தேர் ஆழிக்கு-திரிபுரசங்காரகாலத்துக்கொண்ட தேரின் உருளைகளாகிய சந்திரசூரியர்களுக்கு.

கஎ-கஅ. நேமி-உருளை ; ஆகாயகங்கையையும் மதியையும் இத்தேரின் முடி தொடச்செல்கின்ற தென்றபடி.

க00. தூபத்தால் விண்புதைய. புணரி-பாற்கடல்.

க0க. பூசை-திருமால் செய்த பூசை. அங்கு-அப்பாற்கடலில்.

க0உ. அவியைக் கையால் தொடநின்றார்-தேவர்.

க0ங. விரிந்த விழியில் உள்ளதீ - கோபாக்கினி. எரிவிழி-நெற்றிக்கண்.

க0ச. வேல் ஆலம்-வேற்படையையும் விடத்தையும். ஆலவட்டம்-விசிறி.

க0ச-க0டு. வேலைதருகொடி-திருமகள். திருமகளை மார்பிலும் பூமிதேவியைப் புயத்திலும் வைத்தகொடி-திருமாலாகிய இடபக்கொடி.

க0சு. சேயோரிருவர்-விநாயகரும் முருகக்கடவுளும். ஏயோரிருவர்-திருமாலும் பிரமதேவரும்; ஏயோர், ஏனையோரொன்பதன் விகாரம். இருபுள் - கருடனும் அன்னமும்.

க0எ. அருக்கர் - சூரியர் பன்னிருவர். முடிவெள்ளெருக்கர்-உருத்திரர் பதினொருவர்.

க0அ. எண்மர் - அட்டவசுக்கள். நிலாஒருவர் - சந்திரன். ஐம்முனிவரோடு இருவர்-சப்தரிஷிகள். மானம் - விமானம்.

க0அ-க0க. இருகாரிப்பெயரோர்-வைரவக்கடவுளும் ஐயனும். ஞாளி-நாய். வாரிப்பணையோன்-மன்மதன். மலைக்கால்-தென்றல்.

க0கூ-கக0. ஓர் எட்டுவேந்தர்-திசாபாலரெண்மர். வருடை-ஆடு

ககக. நவசித்தர் - ஆதிநாதர்முதலியோர். போகர்-போகபூமியிலுள்ளோர். ஆகம்-மார்பு.

ககஉ. ஏமப்பூண்-பொன்னாபரணம். வாமம்-இடப்பக்கம்.

ககங. வரைப்பிறந்த அன்னம்-உமாதேவியார்.

ககச. வான்மகள் - இந்திராணி. மூன்றுதிருக்கண்மகள் - துர்க்கை. இகிரிக்கைம்மகள்-காளி.

ககரு. இருவர் - தும்புரு நாரதர்; கம்பளர் அசுவதரரென்னும் உரகர்களுமாம். இசையாகிய தேனை இறைப்ப.

ககஎ-ககக. குடமுழவு முதலியன வாத்தியவிசேடங்கள்.

ககக-கஉ0. மகுடத்தலையன்-முசுகுந்தசக்கரவர்த்தி. தருநாடு-சுவர்க்கலோகம்.

கஉக. ஒருமறையோன் - சோமாசி மாறநாயனார்.

கஉஉ. முனிவர்-தேவர்.

கஉச. ஆயின்-ஆராய்ந்தால்.

கஉரு. எழுகடலும் சிறுகும்.

கஉசு. செல்விவரும் ஆலயத்து மடவார் - திருமகள் அவதரித்த பாற் கடலிற் றோன்றிய தெய்வமகளிர்.

கஉசு-கஉஎ. அரிமகன்-மன்மதன். சாபம்-'இறக்க' என்று உமாதேவியாரிட்டசாபம். நீக்கியது-இறந்த பின்பு மீட்டும் தோன்றுவானென்றது. (திருவாரூர்ப்பு-தியாகராச.)

கஉஎ-கஉஅ. ஒருவன்-விசுவாமித்திரமுனிவர். அவரால் மேனகை ஒரு காலத்துச் சாபமுற்று இத்தலத்தை யடைந்து அச்சாபத்தை அவள் நீக்கிக் கொண்டனள். (திருவாரூர்ப்பு-விசுவா) மால் நகரின் - பெருமை பொருந்திய வீடுகளையுடைய.

கஉஅ-கஉகூ. ஒருபெண்-காயத்திரி. பிரமன்பாற் காயத்திரியைச் சேர்த்த சரிதையைப் பிரமயாகச்சருக்கத்தாலுணர்க. (திருவாரூர்ப்பு.)

கங0. ஒருவிஞ்சையன்-சுந்தரமூர்த்திநாயனார். விஞ்சையர் மாதர்-வித்தியாதரமகளிர்.

கங0-கஙக. ஸந்நிதியில்வந்து யாழ் வாசிக்கவேண்டுமென்று திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார் நிரம்பப் பிரார்த்தித்தபொழுது, ஸ்ரீ வன்மீகநாதர், வடமதிலில் ஒரு வாயில்செய்வித்து, அவ்வழியே வருவித்து யாழ்வாசிக்கச் செய்து கேட்டருளினர்; அவருடன் சில கந்தருவமகளிர் வந்தனரென்பது வரலாறு: இதனை, பெரியபுராணத்தில் திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார் புராணம், அ-ம் திருவிருத்தத்தாலும், "திருநீல கண்டத்துப் பெரும்பாணன் றிருமூலட் டானன் முன்னே, பெருகார்வத் துடனேயாழ் வாசிக்கப் பெறுவேனே யென்கை பேணி, யுரமாரும் வடமதிலி லொருவாய்தல் செய்வித்துள் வரவு மேவித், திருவாரூர்த் திருமூலட்டானனவன் யாழ்கேட்டுச் சிறப்புச் செய்தான்." (திருவாரூர்ச். ௯அ) என்னும் கமலாலயச்சிறப்பாலும், "பாதியிரா, வாரூர் வடபுரிசை யன்பாற் றிறந்ததுவும்." (௯சுசு, ௯சுஎ) என்னும் திருக்கழுக்குன்ற உலாவாலுமுணர்க.

கஙஉ. பிரமதேவர் இத்தலத்தை ஒருதட்டிலும் மற்றைத் தலங்களை ஒருதட்டிலும் வைத்து நிறுத்தபொழுது, இத்தலம் கனத்துவிளங்கிய தென்பது வரலாறு; "ஒருதலையி னப்புரி வைத்தொழிந்தசிவ புரிவிதங்க ளனைத்து மற்றை, யொருதலையி னுறவைத்தே யுறத்தூக்கிப் பார்த்தலுமப் புரிக்கே யொத்த, குருவிலைமற் றப்புரிகட் கப்புரியிற் பராசத்தி குலவ லாலே, யுரியபெயர் சீநகர மதுதனையே திருவாரூ ரென்ப ரோர்ந்தோர்." (கமலா. பசுபதி). இப்படி-இத்தலம்.

கஙச. கோடி-வளைவு.

கஙசு-கஙஎ. வாய்முத்தும் தோன்வேயும் எதிர்மிரனிறை.

கஙகூ-கசக. ஆனந்தர்-ஆனந்தேசுவரர். தாமரைப்பூக்களைப் பறித்து விற்று வயிறுவளர்ப்பவனாகிய பட்டினசாமியென்னும் வணிகனொருவன், ஒருநாள் அவைகள் விற்கப்படாமையால் மெலிந்து இத்தலத்தை அடைந்து அன்றிரவிற் சிலபெரியோர்கள் கட்டளைப்படி ஆனந்தேசரை அம்மலர்களால் அருச்சித்து விழித்துக்கொண்டேயிருந்து தாங்கமுடியாதபசியால் மறுநாட்காலையில் இறந்தான்; மனைவியுமிறந்தாள். பின்பு அவன் சூரியகுலத்

தில் இக்ஷ்வாகுபரம்பரையிற் பத்திர சேனனென்னும் அரசனுளன். அவள் அவனுடைய தேவியாயினளென்பது வரலாறு. (திருவாரூர்ப்பு. ஆனந்தே.) தெளிர்த்தல் - முழங்குதல். குருகு - வளையல்.

கச௨. முழுக-முழக்க.

கச௫. அந்தி போதும் மதி-அந்தியில் வருகின்ற சந்திரன்.

கச௬. முகிழ்ப்பு-அரும்புதல்.

கச௮. தார்-மார்பின்மாலை.

கச௯. வனசம் கரன்-தாமரைமலர் போன்ற திருக்கைகளில். கனசக்கரன் அமளிக் கச்சு - கனவிய சக்கரத்தையுடைய திருமாலின் படுக்கையாகிய அராக்கச்சு.

க௫0. தியாகவினோதப் பெயர் வரைந்த சேலை - தியாகவினோதரென்னும் திருநாமத்தை எழுதிய சேலை; இஃது இக்காலத்து, தியாகவர்ணமென வழங்கும். சீரா-தலைச்சீரா.

க௫க. ஆடரவக்கிண்கிணி-ஆடரவமும் கிண்கிணியுமென்க.

க௫ச. முசுகுந்தசக்கரவர்த்தி, வைவச்சுதகற்பத்தில் மாசிமாதத்தில் அத்தநக்ஷத்திரத்தில் இத்தலத்தே ஸ்ரீதியாகேசரை ஸ்தாபனஞ்செய்து திருவிழாச் செய்வித்தனர். (கமலா. சோமா. ௨அ; திருவாரூர்ப்பு. தியாகராச. ௨௬௪; திருவிழா.)

க௫௫. வீரை-கடல். வீரகண்டையம்-தியாகேசருடைய வாட்படை.

க௫எ. திருமார்பிற்குச் செவ்விய அந்திவானமும் செவ்வந்திமாலைக்கு நிலாவும் உவமைகள்.

க௫எ-க௫அ. சிவபெருமானுடைய திருச்செவிகளிற் கம்பளர் அசுவதரரென்னு மிருவரும் இடைவிடாமற் பாடிக்கொண்டிருக்கின்றன ரென்பது சைவபுராணவரலாறு.

க௬0. தோற்று அழகு - தோற்றமழகு.

க௬க. கங்கைக்கு முகங்கள் ஆயிரமாதலின், கண்கள் ஈராயிரம் கூறப்பட்டன.

க௬௨. வீதியிடத்து எள்விழா.

க௬ச. நெருப்பினுல் நீர்குறையும்.

க௬௬. 'அம்பொன் குடத்தோடளித்து' என்றார், கொங்கைகளைப் பசப்பித்தது கருதி.

க௬எ. அமண்-சமணமதம், ஆடையின்மை. தென்னாட்டு அமணைச்சிதைத்தார்-பாண்டிநாட்டிற் சமணமதத்தை அழிவித்தார். கூறை-ஆடை.

க௬அ-க௬௯. கன்று - பசுக்கன்று, வளையல்கள்; பெரியபுராணத்தில் திருவாரூர்ச்சிறப்பிற்கூறிய கதை ஈண்டு உணரற்பாலது.

கஎ௨. சாலகம்-தியாகேசர்பக்கத்திலுள்ள பல்கணி.

கஎ௩-கஎச. அடிவைப்பு ஒன்றற்கு ஆயிரம்பொன் பெய்தல், "கனக மோரடிக் காயிர நல்குமெங் கடவு ளனக நாயகன்" (திருவாரூர்ப்பு. திருநகரச். சஎ) என்பதனாலு முணரப்படும்.

கஎ௫. மாலானவர் தனுநாண்-திருமாலினுடைய வில்லிற்பூட்டிய நாணி; மயக்கமடைந்த மகளிருடைய உடம்பிலுள்ள இலச்சை.

கஎ௬. வேதியன் - சோமாசிமாற நாயனார்.

கஅ0. மாறு-விடை.

௧௮௪. சிவதத்தமாவளவன் அரசுரிமையைப் பெறுமளவும் தியாகேசர், அரசராகவீற்றிருந்து நாட்டிலுள்ளாருடைய இன்பதுன்பங்களைத் தமது திருவாக்காலேயே விசாரித்து அரசாட்சி செய்தருளினமையின், 'திருவாய்க்கேள்வி செய்தகதை' என்றார். இச்சரிதையைத் தியாகராசலீலையாலுணர்க. திருவாய்க்கேள்வி என்னுமொழியைத் தமிழ்ச் சிலாசாசனங்களிற் பரக்கக் காணலாம்.

௧௮௫. சாந்து - கருஞ்சாந்து.

௧௮௬. காமன்-காமனால்.

௧௮௭. கலை - கலைமான், வித்தை.

௧௯௦. தக்கன்மகம் பலரையுங்கூட்டி முடித்ததென்றது ஈண்டு அறியத்தக்கது. கூட்டிமுடியாத, சிலேடை.

௧௯௨-௧௯௩. தேரூர்ந்தசேய் முதலியோர்கள் இறந்து பிறந்தமை, இவனுடைய பற்கள் வீழ்ந்து முளைத்தமைக்கு உவமை. தேரூர்ந்தசேய் - வீதிவிடங்கன். செங்காட்டிற சேய்-சீராளதேவர். கரா-முதலை.

௧௯௩-௧௯௪. சேயும் உடன்கூடுந் துணையும் - திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் வந்து கூடச்சேருமளவும்.

௧௯௯. வள்ளம்-கிண்ணம் அமைதன்று-அக்கிண்ணமென்று. ஆயம் நள்-ஆயத்தின் நடுவே.

௨0௧-௨0௨. சூரியகுலத்தில் தசரதர்மரபிற் பிறந்து ஊமையாகவேயிருந்து அரசாட்சிசெய்துவந்த தசரதனென்னு மரசன், இத்தலத்தையடைந்து வாணிதீர்த்தத்தில் ஆடி எழுந்தவுடன் வாக்கு உண்டாகப்பெற்று அதன் வடகரையில் எழுந்தருளிய பராசத்தியைப் பலகவிகளால் துதித்தானென்பது வரலாறு; "மேதகு வாணி தீர்த்த வியன்புனற் படிந்த வேந்தன், வாதவூராளி செய்ய வதனதா மரை கொழிக்குஞ், சீதமா கருணை வெள்ளந் திளைத்திடு மூங்கை யென்னப், போதமா மதுரச் செந்தேன் பொழிகவி பலமொழிந்தான்" (திருவாரூர்ப்பு. பரா.௨௬.)

௨0௩-௨0௪. சிதம்பரத்தில் அர்த்தயாமதரிசனமும் இத்தலத்தில் திருவந்திக்காப்புத் தரிசனமும் மிக்கவிசேடமுடையன; இவ்வுண்மை, "ஆதலாற் கம லாலயத் தந்தியங் காப்பும், கோதிலாமணி மன்றத்தி யாமமுங் குடியாப், போதும்" (திருக்கழுக்குன்ற. உருத்திர. ௫௬) என்பதனால் உணரற்பாலது. இதுபற்றியே தியாகேசருக்குத் திருவந்திக்காப்பழகரென்பது திருநாமமாயிற்று. தில்லை ஆர் ஊர்-தில்லைமரங்கள் நிரம்பிய ஊர்; சிதம்பரம்.

௨0௫. ஆனர்த்ததேசத்து அரசனாகிய சமற்காரனென்பவன், வேட்டையாடச்சென்று, கன்றுக்குப் பாலூட்டிக்கொண்டு நின்ற பெண்மான்மீது அம்பையெய்து, வெண்குட்டமுண்டாகும்படி அதனாற் சபிக்கப்பெற்று, எவ்விடத்தும் அந்நோய் தீரப்பெறாமல் இத்தலத்தையடைந்து சங்கதீர்த்தத்திலாடி அந்நோய்நீங்கப்பெற்று இந்நகரத்தைப் புதுப்பித்துப் பல அந்தணர்களை இங்கே தாபனஞ்செய்தமையால், இதற்குச் சமற்காரபுரமென்பது பெயராயிற்று. (திருவாரூர்ப்பு. சமற்கார.)

௨0௬. திருவாரூரிற் பிறந்தவர்கள் முத்தியெய்துதற்கு உரியவர்கள் என்பதை, "திருவாரூர்ப் பிறந்தார்களெல்லார்க்கு மடியேன்" (திருத்தொண்டத். ௧0) என்பதனாலுமுணர்க. பேரின்பத்தை அடைவிக்கும் பெம்மான்.

௨0௬-௨0௭. புலை-அசுத்தம். திருவாரூரில் உத்ஸவதரிசனஞ் செய்துவிட்டுத் தமது ஊரையடைந்த நமிநந்தியடிகள்நாயனார் பலரும் தீண்டினமையால் தமக்கு அசுத்தமுண்டாயிற்றென்

றும் ஸ்நானஞ்செய்துவிட்டே சிவபூசை செய்யவேண்டுமென்றும் கருதி ஸ்நானத்திற்குத் தீர்த்தங் கொண்டுவரச் சொல்லிவிட்டுத் தமது வீட்டின் புறத்திண்ணையில் தங்கினர். அயர்ச்சி மிகுதியால் சிறிது துயில்வந்தது. அப்பொழுது, தியாகேசர் அவருடைய கனவி லெழுந்தருளி, "திருவாரூரிற் பிறந்தவர்களெல்லாரும் நம்கணங்கள்; அதனை நாளைக் காண்பாயாக" என்று அருளிச்செய்துவிட்டு மறைந்தருளினார். (பெரிய. நமிநந்தி)

௨0௬. மொய்த்து ஆயம் முன் செல்ல.

௨௧௧-௨௧௩ தியாகேசர் திருவடியிலுள்ள ஆடரவக் கிண்கிணியைப் பேதை வேண்டுமென்றல் இக்கண்ணிகளாற் கூறப்படும். ஆட்டைக்கு இருதினம்-பாதசேவைக்கு உரிய நாட்கள், மார்கழித் திருவாதிரையும் பங்குனி உத்தரமும். பந்தித்த-கட்டிய.

௨௧௪. விதிப்பதோ - உண்டுபண்ணுவதோ.

௨௧௭. இரண்டு-ஆடரவமும் கிண்கிணியும். இந்தவிரண்டும் ஒன்றாகவுங் கூறப்படும்.

௨௧௯. இவ்வாட்டு- அஜபாநடனம். ஆடரவமாகிய பதஞ்சலி, ஆதிசேடனுடைய அவதாரமாதலின், 'இன்னமரி பாழிழக்குமோ' என்றார்.

௨௨0. உரைத்துமோ, உளப்பாட்டுத்தன்மைப்பன்மை.

௨௨௧. ஆழியான்சேய்-மன்மதன்.

௨௨௨. பெட்குமது-விரும்புதற்குரியது. பொதும்பு-மரப்பொந்து. எதிர்ந்து-மழையை யெதிர்ந்து.

௨௨௪. வேட்பு - வேட்டல்.

௨௨௬. பறை - வாத்தியம்.

௨௨௬-௨௨௭. சிவபெருமானுடைய விடை-திருமால்; அவர் இராமாவதாரத்தில் இராவணனை முதறபோரினிறுதியில், 'இன்றுசென்று நாளைவா' என்றது ஈண்டு அறியற்பாலது. (கம்ப. யுத்த. முதற். உ௫௬)

௨௨௮. கமலை என-திருவாரூரைப் போல. கொண்டைக்குத் திருவாரூருவமை. செங்கமலை மாலையே கூடும்படி யென்றதற்கு, திருமகள் திருமாலைச் சேரும்படி யென்றும், திருமகள் வடிவாகச் செய்யப்படும் அணியும் பூமாலையும் தன்பாற் சேரும்படி யென்றும் பொருள்கொள்க.

௨௨௮-௨௨௯. ஆடும்வினை - விளையாட்டு. வேகடஞ்செய்யாதாய்-சாணைபிடித்தல்செய்யப்படாதமாணிக்கமாய். செய்மணியாய் - வேகடஞ் செய்த மணியாய்.

௨௩௧. பாவைவிளையாடி-பாவையை வைத்துக்கொண்டு விளையாடி. கொல்லி-கொல்லிமலை. அம்மலை தன்பாற் பாவையையுடைமையின், பாவையையுடைய இவளுக்கு உவமையாயிற்று; அப்பாவை கொல்லிப்பாவை யெனப்படும். 'போய்' என்றார், பேதைப்பருவங் கடந்தமையின்.

௨௩௩-௨௩௫. சத்தவிடங்கத்தலத்துள், திருக்காறாயிலில் ஆதிவிடங்கரென்றும், திருக்கோளிலியில் அவனிவிடங்கரென்றும், திருமறைக்காட்டிற் புவனிவிடங்கரென்றும், திருவாய்மூரில் நீலவிடங்கரென்றும், திருநள்ளாற்றில் நகரவிடங்கரென்றும், திருவாரூரில் வீதிவிடங்கரென்றும் திருநாகைக்காரோணத்தில் அழகவிடங்கரென்றும் தியாகராசமூர்த்திகளுக்குத் திருநாமங்கள் உள்ளன. செவ்வந்திக்கு இட்டபெயராதலின், 'விடங்கு' என்றார். ஆரூரன் நாமத்தது - வீதிவிடங்

கென்பது; உரு-உகூம் கண்ணிகளின் குறிப்பைப் பார்க்க.

உகூகூ. தொடலே-மாலே. தொடலே செய்தென்க. மிலேந்து-சூடி.

உகூஎ. தியாகேசன்விருப்பே-தியாகேசருடைய விருப்பத்திற்குரியதே. கொடுத்துமென - கொடுப்போமென்று சொல்ல.

உகூஅ. சூடியபின்-நீ அணிந்தபின்பு.

உகூகூ. கண்ணுக்குக் கண்ணே இடந்து இட்டார்-கண்ணப்பநாயனர். தாம் சூடியபூவைச் சூட்டுதற்குரியவர் கண்ணப்பநாயனரே யென்றபடி.

உச0. திருமாலுக்கல்லாமல்.

உசக. பிறர்-பிரமகளிர். பங்குடையாள்-உமாதேவியார்.

உசங - உசச. திருத்தொண்டத்தொகை.

உசரு - உசகூ. கருணைகரத்தொண்டைமா னென்பவர், அரசனிடத்து அமைச்சராக விருந்து அவனுடைய அனுமதியின்றி அவன்பொருள்களைக் கொண்டு தியாகேசருக்குப் பற்பல திருப்பணிகள்செய்து பின்பு அவனல் வருத்தமுற்றுப் பலர் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே தியாகேசருடைய திருவடிகளை அடைந்தாரென்னும் வரலாறு ஈண்டு அறியற்பாலது; தியாகேசருடைய விருதாவளித் திருநாமங்களுள் கருணைகரத்தொண்டைமானென்பதும் ஒன்று; "கருணைகரன்செய் திருப்பணியைக் கருதி நலமாய்க் கண்டு செய்த, பொருளாகரனு லத்துடையான் பூமியானைப் போலாரோ" என்னும் சோழமண்டலசதகமும் அவர் திருப்பணிசெய்ததை வலியுறுத்துகின்றது.

உசகூ-உசஎ. கரம்-ஒளி. துங்கத்திகிரி - மேலாகிய தேருருள். திகிரி வெற்பு - சக்கரவாளகிரி. பொங்க - ஒலிக்க.

உரு0. அரியணை-தியாகேசருடைய சிங்காதனம்.

உருஉ. போதனையும் பாப்பனையும் முறையே பிரமனுக்கும் திருமாலுக்கு முரியவை. பண்டு அளந்த - முன்பு திறையாக அளந்த. ஆரம்-முத்து.

உருரு. மறி - மான். அல்லாய - இருளையொத்த.

உருஎ-உருஅ. மேல் - பண்டைப் பிறப்பில். இடம் கிட்டுமோவென்க. சிவபெருமான் உண்டருளிய விடத்தின் கொடுமையை உமாதேவியார் தணித்தருளினரென்பது புராணவரலாறு.

உருகூ. பணி-வணங்குவாய். தீங்கு நீங்கும்.

உகூ0. இடம், சிலேடை.

உகூக. தேவரகண்ட ரென்பது, ஸ்வாமி திருநாமம்.

உகூஉ. அருத்திவைத்த - ஆசை வைத்த.

உகூங-உகூச. பிறிது-திருமகளுக்கு வேறாக. பொய்கையில் - தேவதீர்த்தத்தில்.

உகூச. வேழமுகன் - விநாயகர். மாற்றைவேழமுகனறியும்போதென்க. ஆணிப்புதுக்கனகம் - உரையாணிப் பொன்; இந்நூற்காப்பில், மாற்றுரைத்த விநாயகர் துதிக்குறிப்பைப்பார்க்க.

உகூரு. அது - அவ்விருள். மூச்சி - உச்சிக்கொண்டை. நச்சு உதயம்-விடத்தின்தோற்றம்.

உசுகூ. தாலக்கா-பனங்காடு. சேய்க்கு - திருஞானசம்பந்தமூர்த்திநாயனுருக்கு. அவர் பதிகத்தால் திருவோத்தூரில் ஆண்பனை பெண்பனையாகிக் காய்த்த குரும்பையும் அவர் திருக்கோலக்காவிற்பெற்ற தாளமும் கொங்கைகளுக்கு உவமை.

உஎகூ. தொழநின்ற - தொழும்படி தியாகேசர் எழுந்தருளியிருந்த. பொன்-இலக்குமி.

உஎஅ. பாகத்தினும்-பாகத்திலிருந்தும். அசைந்தாடி-தியாகராசர். பால்-வெண்மை. பளிதம் - பச்சைக்கருப்பூரம்.

உஅக. திருமகளும் கலைமகளும்.

உஅஉ. வேய்முத்து-சிவபெருமான்.

உஅச. கருமா-ஆதிவராகம்.

உஅரு. நிலவை-சந்திரனை.

உஅகூ. அரிக்கரியதாமரை-திருமாலுக்கு அரிய திருவடி; வண்டுக்கு அரிய தாமரைப்பூவென்பது மற்றொரு பொருள்.

உஅஎ. நந்து-சங்கம்.

உஅரு-உஅஎ. முத்துப் பிறக்குமிடங்களாதலின் கரும்பு, பன்றி, யானை, சந்திரன், சங்கம் இவைகள் கூறப்பட்டன. இவற்றுற் சிவாதிக்கியம் கூறினமை அறியத்தக்கது; முன்பு சிவபெருமானை, 'வேய்முத்து' என்றமைக்கேற்ப, ஒன்றன்பால்வினைமுற்றுக்கள் கூறப்பட்டன.

உஅகூ. பனிப்போதின்-பனிக்காலத்துத் தாமரைப்பூவைப் போல.

உகூஉ. இழை ஊசல்-செய்த ஊசல்; வினைத்தொகை.

உகூரு. கயம்-தடாகம்.

உகூச. மதியப்பூப்பு-சந்திரோதயம்.

உகூஅ. வேணுமுத்து - வேயீன்ற முத்து; சிவபெருமான். வாள் நகம் - கைலையங்கிரி.

உகூகூ. பேர்த்த நிசாசரன்-இராவணன். சீர்த்தநிசாசரன்-சந்திரன். கூர்த்து-மிக்கு.

௩00. ஒடுக்குமோ-உயிரை ஒடுக்குமோ.

௩0க. பூசையிற்கூடு மணிதவிர - சிவபூசையிற் கூடியமணி உயிரை உண்ணுதலன்றி; உயிரை உண்ணுதலாவது பசுகரணங்களைப் போக்குதல்.

௩0உ. பூண் - பாம்பு.

௩0௩. தமிழ் அமுத விண்டு-பொதியின்மலை.

௩0ச. கன்று-வளையல்.

௩0கூ. அம் கை-அழகிய கைம்மரம்.

௩க0. ஆழியான்-திருமால்.

௩கக. திருமாலின் வில்லின் நாணைத் தேவர்கள் கறையான் வடிவங் கொண்டு அரித்து அறுத்த கதை ஈண்டு அறியற்பாலது.

௩கஉ-௩க௩. திருவாரூரிற் சூரிய புஷ்கரிணிகள் மூன்றுளவுள்ளன; அவற்றிலுண்டான மூன்று தாமரைமலர்கள், முறையே கீழிடத்தையும் பக்கத்தையும் மேலிடத்தையுமேநோக்கி மலர்ந்திருந்தன. (திருவாரூர்ப்பு. சூரிய.)

௩கரு. பாதாளப் பொற்புவனத்து-பாதாளத்துள்ள ஆடகேசத்தில்.

௩ககூ. பணிக்கு - ஆபரணத்திற்கு. பணிமணி - பாம்பின்மணியை.

ருகஎ. வாசி - விசேடம்; இந்தலத்துள்ள அசலேசரென்னுஞ் சிவலிங்கப் பெருமானுடையநிழல் கிழக்குத்திசையிலன்றி வேறு திசைகளிற்செல்லாது. (திருவாரூர்ப்பு. அசலே). அசலநிழல்- சலித்தலில்லாத நிழல்.

ருகக. பண்மகள்-விறலி.

ருகக-ருரு0. இவை வினாவிடைகளாகவுள்ளவை: ருகக, ருஉக, ருஉரு, ருஉடு, ருஉஎ, ருஉகூ—இக்கண்ணிகள் வினா; ருஉ0, ருஉஉ, ருஉச, ருஉசு, ருஉஅ, ருரு0,—இக்கண்ணிகள் விடை.

ருஉ0. நாளையுண்டு.

ருஉஉ. அங்கம் பெண்ணுக்குதல் - என்பைப் பெண்ணாக்கல்.

ருஉரு. கோட்டுமெதியத்தழல்-பிறைத் தழல்.

ருஉடு. மறித்தும்-மீட்டும்.

ருஉகூ. பொன்பறித்தது, திருமுருகன்பூண்டியின்பக்கத்தில். நிறத்துப் பாரப்பசும்பொன் - பசலை; நிறம் - மார்பு.

ருஉஎ. குவளை மிடறு-கருங்குவளை மலர்போன்ற கழுத்து. எகு வளை - நீங்குகின்ற வளையல்கள்.

ருஉகூ. கோவம் - இந்திரகோபம். ஆவம் - அம்பறாத்தூணி. விசயன் - அருச்சுனன்.

ருருக. பனிக்காலை முட்ட - இராக்கால முழுக்க. தனிக்காலை - ஒருநாளையை.

ருருஉ. ஓட்டும் தேர்-சூரியனுடைய தேர்.

ருருடு-ருருகூ. ஆசை - திசை. ஆடரவம் சேடனாதலின், 'எட்டெனும் மாசை யுடனாடும்' என்றார். ஆசு - விரைவு.

ருருஎ. காமாரி-சிவபெருமான்.

ருருஅ. கமலாலயவல்லி - கமலாம்பிகை; இவர் பராசத்தியென்றுங் கூறப்பெறுவர்.

ருச0. வெள் நத்தான் சேய்-வெள்ளிய சங்கத்தையுடைய திருமாலின் புதல்வனாகிய மன்மதன்.

ருசஉ. படிமம்-கண்ணாடி.

ருசரு. கனல் ஆற்று-வெப்பத்தை ஆற்றிய.

ருசச. பணையப்பணைத்து - மிகப் பருத்து.

ருசடு. அன்பர்-காமுகர். ஒளித்ததென - ஒளித்துவிட்டதென்று சொல்லும்படி. வார் வம்பு இறக்கும்-கச்சைக் கடக்கும்.

ருசகூ. தங்கு ஏர் - தங்கிய அழகு.

ருசகூ-ருசஎ. மங்கைமுதலைந்தில் - ஐந்துபருவத்தில். கருமம் ஐந்து-பஞ்சகிருத்தியம்; நடு-அழித்தல்.

ருசக. இரா-இரவில். இடப்பக்கத்தில் வீணையொன்றையேந்தி.

ருடு0-ருடுஉ. இவற்றால் தசாங்கங்கள் கூறப்படுகின்றன. மணிவரை - அரதனசிருங்கமலை; இஃது ஆடகேசர் எழுந்தருளிய நாகபிலத்திற்கு யாவரும் செல்லாதபடி இந்திரன் சேர்த்தியது; (திருவாரூர்ப்பு. ஆடகே. உரு); மாணிக்கமலையுமாம். ஈராயிரமருப்புவேழம் - ஐராவணம். பஞ்சானனமுரசு - பஞ்சமுகவாத்தியம்; இது தியாகேசர்சந்நிதியிலுள்ள விசேடவாத்தியம். வீரகண்டையம்-தியாகேசருடைய வாளாயுதம்.

௩௫௩. பண்கள் பதினெட்டென்பது சிலருடைய கொள்கை; திருவேடகப் புராணம், ஏடகநகர்வளம் ௩௮-ம் செய்யுள்: "அயன்றலை சிவன்றன தங்கை யூடிருந், தியன்றிசைத் திடுபதி னெண்ப ணீர்மையாற், பயன்றரு மூவர்தம் பதிக மோதுவார், முயன்றுறை மாடகோடிகளு மொய்த்தவே." என்பதனானு முணர்க.

௩௫௪. மாட்டோர் - பக்கத்திலுள்ளோர். 'என்' என்பதை 'மகிழ்ந்து' என்பதனோடுங் கூட்டுக.

௩௫௬. பெய் போதில்-அருச்சித்த ஆயிரம் தாமரைமலர்களில். பெறும் சிறுவன்-மன்மதன்.

௩௫௭. வேழம் - யானை, கரும்பு. கல்லோலம்-அலை.

௩௬௦. இருந்தோர்-இருந்த விறலியரும் பாணர்களும். குன்றை-மேருமலையை.

௩௬௭. தாங்கித்து-அலைந்து.

௩௬௮ - ௩௭௭. திருவந்திக்காப்பு வருணனை.

௩௬௯. உம்பர்சேனபதி - முருகக் கடவுள்.

௩௭௦. கண்டயம் - வீரகண்டயம்; வாள். விரவு ஆர்-கலத்தல்பொருந்திய.

௩௭௧. மலர்களாற் செய்யப்படும் மாலை, தோடு முதலியவற்றைப் பணியென்றல் மரபு.

௩௭௩. மத்தளம் - சுத்தமத்தளம். இதுமுதலாகிய ஐந்தும் சுத்ததத்துவங்கள் ஐந்தென்று சொல்லப்படும். (தியாக. திருநகா. ௧௭௧.)

௩௭௫. கொத்து-அடியவர் தொகுதி. பதியிலாள் - உருத்திரகணிகை.

௩௭௯. புல்லம்-இடபம்.

௩௮௨. வீதி, சிலேடை.

௩௮௩. சந்து-தூது.

௩௮௫. கம்பேந்தி - திருமால்.

௩௮௬. நிச்சவிழா-நித்தியோத்ஸவம்.

௩௮௮. குழவி - மனுநீதிகண்ட சோழருடைய குமாரராகிய வீதிவிடங்கர்.

௩௮௮ - ௩௯௧. திரிசங்குவென்னு மரசன்முதலியோர் தேவதீர்த்தத்திலாடித் திவ்யசரீரம்பெற்றுச் சுவர்க்கமடைந்ததுபற்றிப் பொறாமையுற்ற இந்திரனதுகட்டளையால் வாயுதேவன் அத்தீர்த்தத்தைத் தூர்த்தான்; அதனால் வாயுதேவனிடத்தும் இந்திரனிடத்தும் சிவபெருமானுக்குக் கோபமுண்டாயிற்று. (திருவாரூர்ப்பு. இந்திர.)

௩௯௨. பத்தி-சிவபக்தியை.

௩௯௩ - ௩௯௫. கைக்கொளலின் - கைக்கொண்டிருத்தல்போல. திரு - தெய்வவுத்தி யென்னும் ஆபரணம்; பிறையும் திருவும் பொலி குழலாள்.

௩௯௮-௩௯௯. இறை திருக்கண் - சோமசூரியர்கள்; இவை அரைப்பட்டிகையிலுள்ள மணிகளுக்கு உவமை.

௪௦௦. கோடிய-வளைந்த.

௪௦௨. இவை யென்றது, பின்னர்க் கூறப்படும் புயல் முதலியவற்றை. ஏற்றுனுடனே தூது மொழிந்திடாது. தாய்-தாவி.

௪௦௬. ஒட்டு இரக்கும் - ஒட்டால் இரக்கும். முனிவர் பன்னியரை-தேவதாருவனத்து முனிவர்களுடைய மனைவியர்களை.

௪௦௭-௪௦௮. சங்கார் கையான்-திருமால்.

௪0௯. இளங்கோக்கள் - வைசியர்.

௪௧0. மீன்வலையால் - மீன்வலை யோடு.

௪௧௩. மூவரும் ஓதியவை-தேவா ரங்கள். மோகத்தால் வருவர்.

௪௧௪. நள்ளாற்றுச்செய்யுள், 'போக மார்த்த' என்னும் திருப்பதிகம்.

௪௧௫. அரசு-கூன்பாண்டியர்; அவருக்கு வெப்புநீங்கிய சரிதம் ஈண்டு அறியத்தக்கது.

௪௧௬. கூன் தள்ளு திருப்பாட்டு, "வாழ்கவந்தணர்" என்னுந் திருப் பாசுரம்.

௪௧௭. யாழ்மூரி, "மாதர்மடப்பிடி" என்னுந் திருப்பதிகம்.

௪௧௮. கல் மிதப்பச் செய்த திருப் பாட்டு, "சொற்றுணைவேதியன்" என் னுந் திருப்பதிகம்.

௪௧௯. ஊரன்கவி, "பரவும் பரி சொன்றறியேன்" என்னுந் திருப்பதி கம்.

௪௨௧. பங்குனியுத்ஸவத்தில் ஆழித் தேரினின்றும் இறங்கிய பின்பு, ஸ்வாமி, திருவாரூரிலிருந்து புலிவலத் துக்குமேற்கே யிருக்கும் வேலங்குடியி லுள்ள மண்டபத்திற்கு எழுந்தருளி அதற்கு எதிர்த்தோட்டத்திலுள்ள பாகற்கொடிகளை அருத்தருள்வது தொன்மையானவழக்க மென்று தெரி கின்றது. இது, பாகல்வேட்டை யென்று வழங்கும்; "மருவுபுகழ்க்கிர்ஷ் ண மகராச ராணை, யரிய வடமலையா ராணை-திருவாரூர்ப், பாகற்கொடியறு ப்பார் பாதத் திருவாணை, த்யாகக் கொடியிறக்காதே." (தமிழ்நாவலர் சரிதை, தத்துவப்பிரகாசர் பாடியது) என்னும் வெண்பாவும், 'ஆடாது மாடிப் பாகற் கொடியறுத்தார்' என்று வழங் கும் பழமொழியும் இதனை வலியுறுத் தும்.

௪௨௩. கொந்தளிப்ப-மிக்குமுழங்க.

௪௨௫. போன்பன்-விறன்மிண்ட நாயனார். புறம்பென்றது, அவர் புற கென்ற மொழியை; திருக்காளத்திநாத ருலா, ௩௩௩, ௫௪௫-ம் கண்ணிகளைப் பார்க்க. இச்சரித்திர விரிவை, பெரிய புராணம், விறன்மிண்டநாயனார்புரா ணத்தா லுணர்க.

௪௨௭. சேவடி தேய.

௪௨௮. தியாகேசருடைய திருவாடு தண்டின்பெயர் மாணிக்கத்தண்டெ ன்று வழங்கும்.

௪௩0. நான்மறையோன்-சோமாசி மாறநாயனார்.

௪௩௧. கேள்வி ஓர் - கேள்வியை உணருகின்ற. வேள்வியோர் - அந்த நாயனாரது யாகசாலைக்கண் இருந்த அந்தணர்.

௪௩௩. நிறுத்ததை, ௩௩௨-ம் கண் ணிக்குறிப்பா லுணர்க.

௪௩௫. இவளது அழகின்மிகுதி யைக் கண்டு வெட்கித் திருமகளும் விளர்ப்புறுவாளென்றபடி.

௪௩௬. தென்னுலவை - தென்றல்.

௪௩௭. ஆதிதிருச்சாலகத்து-தியாக ராசருடைய பல்கணிவாயிலில்.

௪௩௯. இவள் சொல் இசையைப் போல்வதாதலின், அதற்கு மனமுரு கிக் கொடிய புலியும் பாம்பும் பணிவன வாயின; "கடும்புலிக ளயர்ந்துசித்ர காயமெனும் பெயர்விளக்கக், கொடும் பணிகண் மாலையதாய்க் குலரத்நவிளக்

கேற்ற" (அழகர்கலம்பகம்-க) என்ப தனு லுணர்க. மன்றுட்டிற் புலியென் றது, வியாக்கிரபாதரை; பணியென் றது, பதஞ்சலியை.

ச௪௨. பனசை - திருப்பனந்தாள். காரிகை - தாடகை யென்னு மாது; இவள் கலைச்சி யென்றுங் கூறப்படு வள்; திருப்பூவணநாதருலா, ௬௩0-ம் கண்ணிக் குறிப்புரையைப் பார்க்க.

ச௪௩. செம்மனச்செல்வி யென் பது, மதுரையிலிருந்த பிட்டுவாணிச்சி யாகிய வந்தி யென்பாளது பெயர்; "சீருடைத் தவத்தின் மிக்காள் செம் மனச் செல்வி யென்னும், பேருடை நரைமூ தாட்டி பிட்டவிற் றுணவு கொள்வாள்" என்பதனுலுணர்க; (திரு வாதவூ. மண்சுமந்த. உ௨). மகவைக் கொய்து.

ச௪௪. செங்காட்டு அம்மை-சிறுத் தொண்டர்மனைவியாராகிய வெண் காட்டுநங்கையார். சந்தன நங்கை- வெண்காட்டுநங்கையாருடைய தாதி யாராகிய சந்தனத்தார்.

ச௪எ. கைவண்டு - கையிலுள்ள வளையல்.

ச௫0. தெள்ளேணம்-மகளிர்விளை யாட்டுக்களுள் ஒன்று.

ச௫க. சம்புப்பரி-நரிக்குதிரை.

ச௫௩. திருத்தோள் நோக்கீர்-திரு த்தோள் நோக்கம் செய்வீர்; விளி. தோள்நோக்கம் - தோள்வீச்சென்றும் வழங்கும். பல்வரியீர்-பலவகையான வரிக்கூத்துக்களையுடையீர்; விளி. பல் வரிக்கூத்தின்பெயர்களைச் சிலப்பதி காரம், எக-ம் பக்கத்துள்ள "சிந்துப்பி ழக்கை"என்னு மேற்கோளா லுணர்க.

ச௫௫. அன்னர் இசைத்தன-குயிற் பத்தும் திருத்தசாங்கமும்.

ச௫எ. சிவபத்தவாணி - சிவபக்தர் களுடைய பெருமையைக் கூறும் வாக் கையுடையது. கனிவாய்-மகிழ்ந்து.

ச௫அ. ஒரு சொல், "தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்" என்பது.

ச௬க-௫0௬. இக்கண்ணிகளில் மக ளிர்களுடைய உறுப்புக்களுக்கு உவ மை கூறுதல்மூகமாக எடுத்துப் பாரா ட்டியிருக்கும் உண்மைநாயன்மார்களு டைய அற்புத திவ்ய சரித்திரங்கள் ஆழ்ந்துநோக்கி இன்புறுதற்குரியன. இவற்றில் தனியடியார்கள், தொகை யடியார்கள் யாவரும் கூறப்பெற்றுள் ளார்.

ச௬க. அளவு பேச எற்கு அடங்கா.

ச௬௨. இளைசையின்மாறர் - இளை யான்குடிமாறநாயனுர்.

ச௬௩. மாறர் - நின்றசீர் நெடுமாற நாயனுர். பண்டையிற்படும்.

ச௬௪. அணங்காக - தெய்வத்தன் மையுள்ளதாக. அசி-ஒருவகைவாள்.

ச௬௫. நவி-மழு.

ச௬௬. படுபு-கொன்று.

சஎ௫. பந்தர்-முத்துப்பந்தர்.

சஎ௬. மந்திரம்-திருமந்திரம். அந் நூலில், 'கெர்ப்பக்கிரியை' என்னும் பகுதியில், ௩அ-ம் செய்யுளில், குயி லின்பெயர் வந்திருத்தல் காண்க.

சஎஎ. ஆனயநாயனுர் அமைக்கு ழல், திருநீலகண்டயாழ்ப்பாணநாயனுர் வீணை யென்க.

சஎஅ. கா - காத்த.

௪எ௬-௪எ௯. இனிமை ஐந்து, குயில், பால், குழல், வீணை, கனி. தண்மை ஒன்று-சந்தனம். அருணம்-செம்மை.

௪அ0. துப்பு-நுகர்பொருள். பகடு-யானை.

௪அ௩. கலயர் - குங்குலியக்கலய நாயனார்.

௪அஎ-௪அஅ. செங்கணர் - கோச்செங்கட்சோழநாயனார்; முன் - முற்பிறப்பில்; இவர் சிலந்தியாயிருக்கும் பொழுது.

௪௯௯. மென்மை தொடையன்றே.

ரு0க. கற்பூரம் பூதிப்பொடியன்றே.

ரு0உ-ரு0௩. சிலை - கல். மற்றச் சமயத்தும் மற்றத் தெய்வத்தலத்து மென்க. திடத்திற்குச் சிலைகளிரண்டு முவமை.

ரு0அ. சதகோடி-சதகோடி மகளிர்.

ருகஎ. கவி-சுந்தரமூர்த்திநாயனார். தண் இயலா-தண்மை இயலாமல்.

ருக௯. விட்டு ஆலும்-வாய்விட்டுக் கூவும்.

ருஉ0. பிள்ளை - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார். பெண்ணை - பனை. புள்-அன்றில்.

ருஉஉ. வேடை-வெப்பம். குவடு-கைலை. வாடையது-வடகாற்று.

பிழையுந்திருத்தமும்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
உ	உஉ	யெய்தியவண்	யெய்தியவன்
கக	கரு	தென்னூரு	தென்னூரு
கஉ	சு	பேயர்	பெயர்
உக	ச	மைந்தாகட	மைந்தர்கட
உச	ரு	னுயிர்புக்கா ளாசெடுத்துப்	னுயிர்புக்கா—ளாசெடுத்துப்
உஎ	உ	புல்லத்தாராக்	புல்லத்தார்க்